[illegible]

மலர் 8 இதழ் 12

July 1935

3L
0?211,N22SK
N35·8·12
186953

509

509

REGD. No. M. 2302.


உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமூர் தம்முக் சுழூத்தினி தோங்குக

OFFICE OF THE REG…
25 JUL 1935
MADRAS



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு அ. §  பலவான்குடி—யுவ—ஆடி  திங்கள் கஉ.

எண்.  உள்ளுறை.  பக்கம்.


சிவநேசன் எட்டாவதாண்டின் உள்ளுறை … அ…

1. தூதின் சிறப்பு 281
2. விஞ்ஞாபனம் 283
3. சுலோக பஞ்சக விஷயம் 298
4. சிவநேசனுக்கு வாழ்த்து 300
5. தேவிகாலோத்தர அ… (101)
6. சைவ முதலுரை … (1—6)


ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:— திருவாசக பாடசாலையில் ஆனிமீ உகவ மகநாள் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளின் குருபூசையும் திருவுலாவும், குமாரவிநாயகர் திருக்கோயிலிலும் நகர சிவாலயத்திலும் உகூவ உத்திரநாள் நடராஜர் திருமஞ்சனமும் தெரிசனமும் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

நல்லூர்:— திருமுது குன்றத்திற் கணித்தான இத் திருத்தல சிவாலய மகா கும்பாபிடேகம் ஆனிமீ உசவ உதயாதி கவ நாழிகைக்குள் மிதுன லக்ன நன் முகூர்த்தத்தில் இறைவர் திருவருளால் இனிது நடைபெற்றது. எனவும், திருமுதுகுன்றத்து சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரியாரவர்கள் கிரியைகளை முறையாக மிகத் திறமையுடன் நடாத்தி வைத்தனர். சிவமகா யாகத்திற்குச் சர்வ சாதகமாக இச்சிவாசாரியரவர்கள் அமைந்ததுஎங்களின்பாக்கியமே. எனவும் தேவஸ்தான தர்மகர்தர்களும் கிராமவாசிகளும் தெரிவிக்கிறார்கள்.

நரசிங்கபுரம்:— பர்வதவர்த்தனி சமேத பர்வதநாதேஸ்வர சுவாமி திருக்கோயில் திருப்பணி இன்னும் சிலபாகம் நிறைவேற வேண்டியிருப்பதால் நிறைவேற்றி ஆவணி மாதத்தில் மகா கும்பாபிஷேகம் செய்யப் பெறுமென சிவஸ்ரீ கன்னிகேஸ்வரக் குருக்கள் முதலானோர் தெரிவிக்கின்றனர்.

தஞ்சை:— பெரிகோயிலுக்கு மின்சாரவிளக்குகள் அமைத்து ஜூலை 12உ மாலை சென்னை அரசாங்க அபிவிருத்தி இலாகா மந்திரி கனம் B. T. ராஜன் அவர்களால் ஏற்றி வைக்கப் பெற்றது.

ப... — ஸ்ரீ சிதம்பரம் பாத பூஜை அம்பலத்தாடும் சுவாமிகள் மடால
எஉ ஞானதேசிக மகா குருபூஜையும் உகவ மாணிக்கவாசகர்
ஜூலை... உ நடராஜர் திருமஞ்சனமும் நன்கு நடைபெற்றன.
யத்தில் ஆனிமீ
குருபூசையும் உ

...:— திருவளர்செல்வர், வயி. நாக.. ராம. வே. இராமநாத
அண்ணாமலைச் செட்டியாரவர்களின் குமாரத்தி திருவளர்
தேவகோட் ... ஆனிமீ உஅவ திருமணம் செய்யப்பெற்றது. அன்புடைய
னுக்கு, கு. கரு. ... நட்பேறுடன் வளம்பல பெற்று இனிது வாழ மீனாட்சி
செல்வி மீனாட்சி ... விப்பாராக.
ராய் அறிவறிந்த
சுந்தரர் திருவருள் ... ஞ்சை ஊரணிப்பிள்ளையார் கோயிலைச்சீரணோத்தாரணம்
பிரசங்கக் கொட்டகை யமைத்தும் ஆவி. ப. குடும்பத்
செய்தும் முக ... கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.
தினரால் ஆனிமீ ...

நாகநாதசுவாமி கோயில் பிரமோற்சவம் வைகாசி உகூவ முதல் ஆனி கூவ
வரை வெகு விமரிசையாக நடைபெற்று நிறைவேறியது. தமிழ்மறைவாணர்
களான S. சுந்தரமூர்த்தி ... துவார்முதலானோர் வந்திருந்துதேவாராதி திருமுறை
களை இன்னிசையுடன் ஓதினர். திருநீலகண்ட நாயனார் சரித்திரம் பிரசங்கிக்கப்
பெற்றது. இவ்வாறு திருமுறைப் பாராயணங்களையும் பிரசங்கங்களையும்
வழக்கமாகச் சிறப்புற நடாத்தும் திருவாளர், பழ. செ. மு. முத்துக்கருப்பன்
செட்டியாரவர்கள் சீருந் திருவும் பேரும் புகழும் செழித்து நெடிதுவாழ இறை
வர் திருவருளைப் பிரார்த்திக்கிறேன். —மாசிலாமணி தேசிகர்.

உ.

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

பலவான்குடி

# "சிவநேசன்"

## எட்டாம் ஆண்டுத் தொகுதி.

பஎ-ஆவணி முதல்—யுவ-ஆடிவரை.

---

பலவான்குடி
"சிவநேசன்" அச்சியந்திரசாலையில்
பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி
வெளியிடப் பெற்றது.

1935

சென்னைப் பதிவு எண் 2302.

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# "சிவநேசன்"

## எட்டாவதாண்டின் உள்ளுறை.


| கட்டுரையின் பெயர். | எழுதிய திருவாளர்கள். | பக்கம். |
| --- | --- | --- |
| அஸ்வத்தாமா பெற்ற சிவசகாயம் | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 212 |
| அடியார் பூஜையே அரன் பூஜை | ... அ. முத்தைய பிள்ளை | 91 |
| அநுபந்தம் | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 198 |
| அநேகமும் அத்துவிதமும் | ... ,, | 161 |
| அம்மை அப்பர் | ... வை. ச. இராமலிங்கமுதலியார் | 41 |
| அயிலும் மயிலும் | ... அ. முத்தைய பிள்ளை | 65 |
| அறநெறி | ... சுப்பிரமணிய உடையார் | 116 |
| ஆராய்ச்சி | ... சி. செல்லையாபிள்ளை | 86-141 |
| ஆலய வரையறை | K. P. சுப்பிரமணிய சிவாசாரியார் | 216 |
| ஆளுடைய அடிகள் அருண்மொழியுவமை | ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை | 269 |
| ஆஸ்திகர்களே! அஞ்சாதீர் | ... இந்துசாதனத்தில் வைதிகன் | 8 |
| இந்தியாவின் தற்கால அரசியல் | ... வை. ச. இராமலிங்க முதலியார் | 171 |
| இந்து மடங்கள் மசோதா | ... பத்திராதிபர் | 181 |
| இயற்கை வாழ்வே இன்பவாழ்வு | ... அ. தம்பிரான் முதலியார் | 133 |
| இரக்கத்தின் இறக்கம் | ... ஜீவகருணையன் | 72 |
| இலங்கை நகரத்தார் சங்கம், கொழும்பு. | சங்கக் காரியதரிசி | 188 |
| உதவியாசிரியர் | ... பத்திராதிபர் | 50 |
| உமாஸ்துதி அர்ஜுனன் செய்தது | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 210 |
| உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள் | ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் | 275 |
| உற்றதுணை | ... பத்திராதிபர் | 101 |
| ஊக்கமது கைவிடேல் | ... அ. க. பொன்னுசாமி முதலியார் | 233 |
| ஊக்கம் | ... வை. ச. இராமலிங்க முதலியார் | 54 |


186953

| | | |
|---|---|---|
| எண்பதாம் ஆண்டுநிறைவுவிழா | ... பத்திராதிபர் | 157 |
| எலுமிச்சம்பழ ரசம் | ... ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் | 28 |
| ஐயவினா? | ... ச. சோமாஸ்கந்தன் | 111 |
| ஐயவினாவிற்கு விடை | ... ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் | 140 |
| ஒரு அன்பரின் பிரிவு | ... பத்திராதிபர் | 267 |
| ஒரு பெரியார் பிரிவு | ... ,, | 117 |
| ஓர் சந்தேகம் | ... கல்யாணசுந்தர உடையார் | 196 |
| ஓர் விடுகவிவினா | ... கண. நித்தியானந்த சுவாமிகள் | 100 |
| கண்முன் காட்டென்பார்க்கு விடை | ... அ. க. பொன்னுசாமி முதலியார் | 115 |
| கவி இன்பம் | ... அ. தம்பிரான்முதலியார் | 205, 245 |
| கண்ணப்பர் புராணம் 154-ம் செய்யுள் பொருளுரை | ப. சிங்காரவேற் பிள்ளை | 144 |
| கிருஷ்ணன் கீதையை மறந்தது | ... தி. மா ஸ்ரீநிவாசய்யங்கார் | 163 |
| குடும்பமே பெண்உலகம் | ... முன்னேற்றம் | 85 |
| கூட்டுக்கமிட்டி அறிக்கைக் கண்டனம் | தனவணிகன் | 151 |
| கூட்டுக்கமிட்டியின்குறுகியநோக்கம் | ... பத்திராதிபர் | 121 |
| கூட்டுக் கமிட்டி அறிக்கையைக் குறித்து விண்ணப்பம் | ராஜா சர் அண்ணாமலைசெட்டியார் | 139 |
| கேதாரவிரதம் | ... கமலகணபதி | 111 |
| சங்கர சம்ஹிதை பிரகடனம் | ... ,, | 58 |
| சப்தவிடங்கத் தலங்கள் | ... ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் | 110 |
| சமயக்கல்வி | ... A. ஐராவதம் பிள்ளை | 21 |
| சம்பந்தர் திருவிளையாடல் | ... நல். கண்ணப்ப முதலியார் | 199 |
| சாதியைக் கெடுக்கச் சாத்தியப்படுமா | ... ஞானசித்தி | 180 |
| சித்துஞ் சடமும் | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 59 |
| சிவபாரம்யம் | ... ,, | 105 |
| சிவபூஜை | ... ச. குமாரசுவாமிக் குருக்கள் | 112 |
| சிவபெருமான் தாருகாவனத்தில் திருவாணியாய்ப் போகலாமா என்பதற்கு நியாயம் | ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் | 57 |
| சிவம் தேவதாருவனத்தில் திருவாணியாய்ச் சென்றதற்கு நியாயம் | ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் | 84 |
| சிவநேசனுக்கு மூலதனம் உதவிய திருவாளர்கள் | பத்திராதிபர் | 231 |



| | | |
|---|---|---|
| சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும் | | 2, 26, 73, 203, 230, 300. |
| சிவநேசன் | ... பத்திராதிபர் | 1 |
| சிவநேசன் அறிவிப்பு | ... ,, | 266 |
| சிவநேசன் வேண்டுகோள் | ... ,, | 24 |
| சிவாதிக்கியம் | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 5 |
| சிவானுக்கிரகம் பரசுராமர் பெற்றது | ... ,, | 209 |
| சிறுதெய்வங்களும் ஜீவ வதையும் | ... வை. ச. இராமலிங்க முதலியார் | 53 |
| சிறுத்தொண்டர் சரிதை | ... அ. முத்தைய பிள்ளை | 94 |
| சிறுவர் தீப்பழக்கம் | ... "பொன்மலர்" | 60 |
| சீவகாருண்யம் | ... குழந்தைவேல்சாமி | 98 |
| சுயராஜ்யம் | ... நல். கண்ணப்ப முதலியார் | 276 |
| சுலோக பஞ்சக விஷயம் | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 208, 255, 298. |
| செட்டிநாட்டு ராஜா அவர்களின் சீரிய வரவு | பத்திராதிபர் | 261 |
| செந்தமிழ் செழிக்கும் வழி | ... வ. மு. இரத்தினேசுவரையர் | 43 |
| செந்தமிழ்ச் செய்யுட்கள் | ... அ. வரதநஞ்சைய பிள்ளை, அ. கந்தசாமி பிள்ளை | 20 |
| செய்ந்நன்றி யறிதல் | ... அ. முத்தையப் பிள்ளை | 272 |
| சொல்வன்மை | ... ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை | 218 |
| சோமசுந்தர விஜயம் | ... நல். கண்ணப்ப முதலியார் | 177 |
| தன்சரிதம் உணர்த்தும் தம்பிரான் தோழர் | ச. தண்டபாணி தேசிகர் | 15-29 |
| தாம்பூலந் தரித்தல் | ... அ. முத்தைய பிள்ளை | 47 |
| தாயுமானவர் தத்துவ விளக்கம் | ... அ. வரதநஞ்சைய பிள்ளை | 37 |
| திரிபுர தகனம் | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 88 |
| திருக்கார்த்திகை தீபம் | ... சு. ஏகாம்பரேச்வர சிவாச்சாரியார் | 97 |
| ,, | ... கமலகணபதி | 116 |
| திருத்தம் | ... பத்திராதிபர் | 231 |
| திருவள்ளுவர் திருநாட்கழகஅறிக்கை | ... கழக அமைச்சர் | 214 |
| திருவாசகச் சிறப்பு | ... "பொன்மலர்" | 50 |
| தில்லைத் திருவாயிரம் திருப்புகழ் | ... தண்டபாணி சுவாமிகள் | 13 |
| தீண்டாதார் ஆலயப்பிரவேசம் அது மதிப்பது சரியல்ல | "இந்துசாதனம்" | 195 |

| | | |
|---|---|---|
| தூதின் சிறப்பு | ... பத்திராதிபர் | 281 |
| தெய்வமூர்த்த தத்துவார்த்தம் | ... வை. ச. இராமலிங்க முதலியார் | 44, 167, 235 |
| தெய்வம் என்பதோர்சித்தம் உண்டாதல் | தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 125 |
| தொண்டின் பெருமை | ... மு. இரத்தின தேசிகர் | 137 |
| தொண்ணூற்றூர் நகரத்தார் தீர்மானங்கள் | பத்திராதிபர் | 152 |
| நகைச்சுவை | ... நல். கண்ணப்ப முதலியார் | 221 |
| நகைச்சுவையும் புலவர்களும் | ... "தமிழ்ப்பொழில்" | 77 |
| நத்தலீனில் டாக்டர் பாமோ | ... "தனவணிகன்" | 149 |
| நமது கடமை | ... வை. ச. இராமலிங்கமுதலியார் | 185 |
| நல்லறிவுச்சுடர் | ... நல். கண்ணப்ப முதலியார் | 70 |
| நன்கொடை | ... பத்திராதிபர் | 26 |
| நாட்டுக்கு வேண்டும் நன்மை | ... ,, | 201 |
| நூல்வெளியீடு | ... ,, | 4 |
| பக்தி | ... S. சந்தான கோபாலையர் | 119 |
| பர்மா இந்தியர் பிரச்சனை | ... ராஜா சர் அண்ணாமலைசெட்டியார் | 159 |
| பலவான்குடி மணிவாசக சங்கத் திருவிழா | பத்திராதிபர் | 25 |
| பழந்தமிழ்ப்புலவர் வரலாறு | ... மு. சுந்தரவடிவேலன் | 239 |
| பாண்டவர் சிவஸ்துதி செய்து பொருள் பெற்றது | தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 165 |
| பிரதோஷமகிமை | ... நல். கண்ணப்ப முதலியார் | 253 |
| பிள்ளையார் நோன்பு நிர்ணயம் | ... சிவாகம சங்கம் | 114 |
| பொய்யாமொழிப்புலவர்சரித விபரீதம் | ஓர் கௌமாரன் | 277 |
| மகாராணியாரின் வாக்குறுதி | ... "ஈழகேசரி" | 265 |
| மக்கட்கு உறுதி | ... பத்திராதிபர் | 49 |
| மதிப்புரை மஞ்சரி | ... | 103, 156, 183, 200, 203, 227, 257, 267. |
| மருத்தன் சிவஸ்துதிசெய்துபொருள் பெற்றது | தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 163 |
| மனோலய விளக்கம் | ... அ. க. பொன்னுசாமிமுதலியார் | 61 |
| மகேஸ்வர பூஜை மகிமை | ... நல். கண்ணப்ப முதலியார் | 221 |
| முத்திநாதன் | ... ,, | 220 |





| | | |
|---|---|---|
| முருகவேளும் ஔவை மூதாட்டியும் | ... வை. ச. இராமலிங்கமுதலியார் | 222 |
| யுவ ஆண்டு வாழ்த்து | ... சஷ்டிச் சுவாமிகள் | 238 |
| ஸ்ரீ ராமர் எமலோகத்திலிருக்கிறார் | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 197 |
| வள்ளுவர் திருநாள் மாசி யுத்தரமே | ... சிவசூரியநாராயண பிள்ளை | 232 |
| விஷ்ணு பாத கங்கையின் கதி | ... தி. மா. ஸ்ரீநிவாசய்யங்கார் | 197 |
| விஞ்ஞாபனம் | ... ராஜாசர் அண்ணாமலை செட்டியார் | 283 |
| விடுகவி வினு விடை | ... வை. ச. இராமலிங்க முதலியார் முதலானோர்கள் | 74 |
| வேண்டுகோள் | ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 12 |
| வேந்தர் வெள்ளிவிழாவாழ்த்து | ... பத்திராதிபர் | 229 |


☞ மறைத்திருவாளர் மகாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூதனமாக எழுதிய குறிப்புரை ஆராய்ச்சிக் குறிப்பு முதலியவற்றுடன் வெளியிட்டு வந்த "பழமலைக் கோவை" என்னும் பழமையான நூலும், தேவகோட்டை சிவாகமசங்க சித்தாந்த போதகாசிரிர், திருவாளர், பொ. முத்தைய பிள்ளை அவர்கள் எழுதிய "சித்தாந்த ரத்ன மென்னும் விருத்தியுரையுடன் தேவிகா லோத்தர ஆகமம்" என் னும் பழமையான நூலும் இவ்வாண்டில் முடிவுற்றன.

## சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும் வரைந்தனுப்பிய திருவாளர்கள்.

1. அ. வரதநஞ்சைய பிள்ளை, ஆசிரியர், ஜலகண்டபுரம்.
2. வை. ச. இராமலிங்க முதலியார், கண்டாச்சிபுரம்.
3. P. S. சுப்பிரமணிய உடையார், ஆண்டான் கோவில் தெய்விக மலைய மன்னர் சங்கக் காரியதரிசி, வலங்கைமான்.
4. அ. முத்தைய பிள்ளை, கண்டாச்சிபுரம்.
5. பழ. சிவ. சிவராமன் செட்டியார், உலகன் பட்டி.
6. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், அண்ணாமலை பல்கலைக் கழக விரிவுரையாளர்.
7. ராம. உ. ராம இராமசாமி செட்டியார், காரைக்குடி.
8. வ. மு. இரத்தினேசுவரையர், தமிழ்ப்பண்டிதர், யாழ்ப்பாணம்.
9. S. சந்தான கோபாலஐயர், ஆண்பாடசாலைத்தலைமையாசிரியர், திருநாவலூர்.
10. V. S. மாரியப்பன், சுவாமி விருதை சிவஞானயோகிகளின் மாணாக்கர், கோவிற்பட்டி.
11. கண. நித்தியானந்த சுவாமி, மேலமடம் குன்றக்குடி.
12. முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமி, கணபதிமந்திரம், பாபநாசம்.
13. தி. மு. செந்திநாயகம் பிள்ளை, கௌமார மடாலயம், ஸ்ரீ திருப்புகழ்த் தண்டபாணி சுவாமி சந்நிதானம், சதுர்வேத சித்தாந்த சண்மத சமயாதீத அத்துவித கௌமார சபைத் தலைவர், திருவாமாத்தூர்.
14. சஷ்டிச் சுவாமி, பரிமணங்குடி.
15. ஸ்ரீ ஆனந்தகான சபையார், கரிசூழ்ந்தமங்கலம்.
16. வித்துவான் ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை, சிதம்பரம்.

---



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.


## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| ஆண்டு ௭ | யுவ—ஆடி 1935—ஜூலை | திங்கள் கஉ |
|---|---|---|


உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## தூதின் சிறப்பு.

**தூ**து என்பது தக்கதலைவரிடத்து அரசரிடத்து யாதாமொரு காரியங் கருதித் தக்காரால் அனுப்பச் சென்று, செல்லும்வழிகளில் அல்லலுறாது குறித்த இடத்தையடைந்து அவைபுக்கு காலமறிந்து, இடனறிந்து வந்த காரியத்தை வகுத்துத் தொகுத்துத் திறமையுடன் எடுத்துக் கூறி அவர் தங் கருத்தை யோர்ந்து காரியசித்தியுடன் மீளுதலேயாம்.

தூது செல்வோர், அன்புடையராக சிறந்த குடிப்பிறப்பினராக அரசினர் விரும்பும் பெருமையுடையராக, அறிவுமிக்குடையராக ஆராய்ந்துபேசும் வன்மையுடையராக தூது அனுப்புவோருக்குச் சமானராகமேம்பட்டவராக இருக்கவேண்டும். இவ்வளவு தகுதியுள்ளாரைத் தேர்ந்து தூதாகக் கொள்ளுதலே இயல்பு.

சுப்பிரமணியக்கடவுளின் தூதாக "வல்லவனினையவீரவாகுவேயாகும்" என நான்முகக் கடவுளும்; இராம தூதாக "ஆரியன் முன்னர்ப்போதுறவுற்ற வதனுனும் காரியமெண்ணிச் சோர்வுற முற்றுங்கடனும் மாருதியொப்பார் வேறிலை" என சாம்பவனும்; பாண்டவர் தூதாராக "நின்னொப்பவரில்லாய் நீயேசென வுரைப்ப மன்னர்க்கு மன்னவன்பால் மாயோனுந்தூதாகி" என்றபடி தரும புத்திரரும்; சுந்தரமூர்த்திசுவாமிகளின் தூதாராக "ஞாலமுய்ய வெழுந்தருளும் நம்பிதூதர் பரவையார்கோல மணிமாளிகை வாயில் குறுகு வார்" என தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானும் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள். இவ்வாறாக வெற்றி மிக்க வீரவாகு

தேவர், அஞ்சனைச் செல்வராகிய அநுமார், பாண்டவ சகாயராகிய கிருஷ்ணபகவான், உலகெலா முணர்ந் தோதற்கரிய நிலவுலாஞ் சடைப் பெருமானாகிய சிவபரஞ் சுடர் ஆகியவர்கள் ஆற்றிய தூதின் சிறப்புகள் இன்றும் போற்றப்பெறுகின்றன.

ஆகவே, யாதாமொரு காரியத்தையும் சாதிக்க வேண்டினால் அதனைத் தகுந்த முறைமையால் நிறைவேற்றுந் திறனுடைய தக்காரைத் தேர்ந்து அவரால் நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமென்பதை "இதனையிதனாலிவன் முடிக்குமென்றாய்ந், ததனையவன் கண் விடல்" என்றார் திருவள்ளுவ தேவர்.

இந்நாள் பர்மாப் பிரிவினையை அடிப் படையாகக் கொண்ட கூட்டுக்கமிட்டி அறிக்கையால் பர்மா இந்தியர்களுக்கு நேரவிருந்த பல இன்னல்களையும் தடுத்து நன்மைபெறும் பொருட்டு பர்மா இந்தியர்களும் பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தினர்களும் அகில தனவைசிய நகரத்தார்களும் பர்மா இந்திய தூது கோஷ்டியொன்றை இங்கிலாந்துக்கு அனுப்பினர்; கனம் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் அதன் தலைவராக விருந்து தூது விஷயத்தை நிறைவேற்றி இயன்றளவு காரியசித்தியுடன் திரும்பி வந்தார்கள். அவர்களாற்றிய செயல்கள்யாவும் இதன் தொடர்பாக அவர்களின் விஞ்ஞாபனத்தாலறியலாம். அவர்களும் அவர்களுடன் உறுதுணையாகச்சென்றுவந்த மகா-ள-ள-ஸ்ரீ அட்வகேட், கா. இராமநாதச்செட்டியாரவர்களும்ஏனையோரும் நன்றாற்றிய சேவையைப்பாராட்டவும் தங்கள் சமூகத்தினராகிய கனம் ராஜாசர் அவர்களையும் அட்வகேட் இராமநாதச் செட்டியாரவர்களையும் வரவேற்று விழாக் கொண்டாடவும் உபசாரப்பத்திரங்கள் வழங்கவும் நகரத்தார்கள் தீர்மானித்திருந்தும், கைமாறு கருதாக்கடப்பாடுடையராகிய கனம் ராஜா சர் அவர்கள் அவை மிகையென்றும் நகரத்தார்களின் பேரன்பே தமக்குப்போதுமானதென்றும்கூறிய பெருமைபோற்றுந் தகையது. தொண்ணூற்றூர்நகரத்தார்கள் ஆனிமீ கஉ-பிற்பகல் கோயிலூர் மடாலயத்தில் கூடி பொதுவாக தூதுகோஷ்டியாரையும் சிறப்பாக கனம் ராஜா சர் அவர்களையும் இராமநாதச் செட்டியாரவர்களையும் தூது விஷயத்தையுவந்து இயன்ற பாதுகாப்புகள் உதவிய துரைத்தனத்தாரையும் அகில தனவைசிய மகாநாட்டின் நிர்வாக சபையாரையும் பாராட்டி நன்றியறிதலுள்ள தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள் அவைகளும் நண்பர் இராமநாதச் செட்டியாரவர்கள் நகரத்தார் முன் நவின்ற தூது வரலாற்றுரையும் விவரமாக அடுத்த திங்கள் சிவநேசனில் வரக் காணலாம். நெடுந் தூரம் கடல்கடந்து சென்று காரியம் சாதித்துவந்த தூதுகோஷ்டியாரின் செயல்கள் யாவும் போற்றத் தகுவனவாகலின், இத்தூதின் சிறப்பும் என்றும் நின்று நிலவுவதாகும்.

---

உ

கோவிலூரில் நாட்டுக்கோட்டை நகரத்தார் கூட்டத்தில்

செட்டிநாடு ராஜா சர்

அண்ணாமலை செட்டியார் அவர்கள்

மேன்மை தங்கிய நகரத்தாரவர்களுக்கு

# விஞ்ஞாபனம்.

## இங்கிலாந்தில் தூதுகோஷ்டியாரின் முயற்சி.

நீண்ட காலமாகநம்மிந்தியாவின்ஒரு மாகாணமாகவிருக்கும் பர்மா தேசத்தைப் பிரிவினை செய்யவேண்டி கவர்ன்மெண்டார் செய்யும் ஏற்பாடுகளில் ஜாயிண்டு பார்லிமெண்டரி கமிட்டி யென்னும் கூட்டுக் கமிட்டியார் வெளியிட்ட ரிபோர்ட்டிலும் அதை அனுசரித்துத் தயாரிக்கப்பட்ட இந்தியா பில் என்னும் மசோதாவிலும் இந்தியர்கள் பர்மாவிற்குள் பிரவேசிப்பதும் வியாபாரம், கைத்தொழில், லேவாதேவி செய்வதும் முக்கியமாக நம்மினத்தாரிடம் மிருக்கும் கோடிக்கணக்கான தொகைபெறுமதியுள்ளவிவசாய நிலங்களை சர்வ சுதந்திரமாயனுபவிப்பதும் இன்னும் பல முக்கிய அம்சங்கள் ஆகிய இவைகளில் பர்மாவில் தற்காலம் குடியேறி இருக்கும் சுமார் 10 லக்ஷம் உள்ள இந்தியர்களனைவருக்கும் பெரும் இடையூறு ஏற்படத்தக்கதாய் சில பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது நம்மெல்லோருக்கும் தெரிந்தவிஷயம். பர்மாஇந்தியர்களுக்குஇடையூறாக ஏற்பட்டிருந்த விதிகளை மாற்றி இந்தியர்களின் சுதந்திரம் குறைவுபடாதபடி வேண்டுவன செய்வதற்காக ஒரு தூது கோஷ்டியார் இங்கிலாந்துக்குப் போய்வர வேண்டுமென்று பர்மாவிலுள்ள இந்தியர்கள் தீர்மானித்தார்கள். பொதுவாக பர்மா இந்தியர்களும், முக்கியமாக நமது நாட்டிலும் பர்மாவிலும் உள்ள நகரத்தாரவர்களும் விரும்பிய பிரகாரம் நானும் நம் இனத்தாருள் ஒருவரான பள்ளத்தூர் அட்வோகேட் ஸ்ரீமான் கா. இராமநாதச் செட்டியாரவர்களும் தூது கோஷ்டியில் சேர்ந்து போய் வந்தோம். ஜாயிண்ட் பார்லிமெண்ட் கமிட்டி ரிபோர்ட்டிலும் இந்தியா மசோதாவிலும் இந்தியர்களுக்கு விரோதமாக ஏற்பட்டிருந்த செக்ஷன்கள் மிகவும் கவலையையுண்டுபண்ணி அதை நிவர்த்திப்பது சிரமசாத்தியமென்று மலைப்புக்கிடமாக இருந்தபோதிலும் ஈசுவர கிருபையை முன்னிட்டும் நகரத்தாரவர்களின் ஆசீர்வாதத்தைப்பெற்றும் நாங்கள் லண்டன் நகர் சென்று இந்தியர்களின் சார்பாகச் செய்த முயற்சி பெரும்பாகம் நன்மையாக நிறைவேறியிருப்பது நமது கவலையைப்போக்கி ஆறுதலைத் தந்திருக்கிறது.

## நன்றி பாராட்டல்.

நகரத்தாரவர்களின் சார்பாக நாங்கள் லண்டன் நகர்சென்று வந்திருப்பதில் நகரத்தாரவர்களுக்கு எங்களிடம் உள்ள அபிமானத்

தைக் காட்டும் பொருட்டு பெரிதான ஓர் விருந்து செய்யவேண்டுமென்று விரும்பினதற்கு நானும் இராமநாதச் செட்டியாரவர்களும் மிகவும் நன்றி பாராட்டுகின்றோம். இங்கிலாந்துக்குப் போய்வர வேண்டுமென்று நகத்தாரவர்களிட்ட கட்டளையை நாங்கள் சிரமேற்கொண்டு உங்கள் அநுமதியின்படி நம்மினத்தாருக்கு ஏற்பட்டிருந்த குறைகளை பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரிடம் தெரிவித்துக் கூடுமானமட்டில் இடையூறுகள் நிவர்த்தியானதுபற்றி நகரத்தாரவர்கள் எங்களிடம் பேரன்பு பாராட்டுகிறார்களென்பதை நாங்கள் நன்றாய் அறிந்திருக்கின்றோம். நகரத்தாரவர்களின் ஆக்ஞைப்படி எங்கள் கடமையைச் செய்தோம். நகரத்தாரவர்களின் உள்ளன்பைத் தெரிந்து கொண்டோம். அதுவே பெரிய விருந்திலும் மிக மகிழ்ச்சியைத் தருகிறது. நகரத்தாரவர்கள் பேரன்பே எங்கள் பாக்கியம்.

### பர்மா முன்னேற்றத்திற்கு நகரத்தார்களின் உதவி.

பர்மாவில் பக்கோ என்று சொல்லப்படும் பெருபகுதியை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 1852-ம் வருஷத்தில் சுதேச அரசரிடமிருந்து சேர்த்துக்கொண்ட காலமுதல் காடடர்ந்த அந்தப்பிரதேசத்தைச் செழித்துக் கொழிக்கும் பொன்போன்ற நெல்விளையும் நன்னிலங்களாக்க வேண்டி பிரிடிஷ் ராஜாங்கத்தார் இந்தியத்தொழிலாளிகளையும், விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவைகளை விருத்தி செய்வதற்கு, இந்திய முதலாளிகளையும், வியாபாரிகளையும் பெரிதும் விரும்பி இவர்கள் பர்மாவில் ஆசையுடன் வந்து குடியேறத்தக்க சாதனங்களையெல்லாம் செய்தார்கள். நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் விவசாயம் கைத்தொழில் வியாபாரம் எல்லாவகையிலும் ஈடுபட்டவர்களுக்குப் பொருளுதவி செய்ததன் காரணமாக காடும் செடியுமாகவிருந்த பிரதேசங்கள் நாடும் நகரமுமாக விளங்குகின்றன.

எட்டாத தூரத்திலுள்ள சிறு கிராமங்களிற் கூட செட்டியார்களின் பணஉதவியால் வியாபாரம் பெருகி கைத்தொழிலும் விருத்தியாகி யிருக்கிறது. ஆரம்பத்தில் எவ்வித ஆதரவுமின்றி மிக யோக்கியப் பொறுப்புடன் செட்டியார்கள் பணம் கொடுத்து உதவியது காரணமாகத்தான் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் மேன்மை அடைந்ததென்பதை அரசாங்கத்தில் பெரும்பதவி வகித்த கவர்னர் முதலான பல பெரும் உத்தியோகஸ்தர்கள் மனமார ஒப்புக்கொண்டு செட்டியார்களைப் பல சமயங்களில் வாழ்த்தியிருக்கின்றார்கள்.

### பர்மியர்கள், நகத்தார்கள் இவர்களின் பரஸ்பர நட்பும் அன்பும்.

பர்மியர்களுக்கும் செட்டியார்களுக்கும் உள்ள மனப்பான்மையைப்பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்போம். செட்டியார்கள் பர்மா நாட்டிற்கு வந்ததுமுதல் சென்ற சில வருஷங்களுக்கு



முன்னதாக ரெங்கோனில் கோரங்கிக் கலகம் என்ற படுகொலைகள் ஏற்பட்ட காலம்வரை செட்டியார்களுக்கும் பர்மியர்களுக்கும் எவ்விதமான மனவேற்றுமையின்றி ஒருவருக்கொருவர் உதவி புரிபவர்களென்ற உணர்ச்சியோடும் மிகவும் அன்னியோன்னியமாகவு மிருந்து வந்தார்கள். தங்கள் நிலங்களை அபகரித்துக் கொள்ள வேண்டுமென்கிற எண்ணம் செட்டியார்களுக்குக் கிஞ்சிற்றேனும் இருந்ததாக பர்மியர்கள் கனவிலும் நினைத்ததில்லை. காலவசத்தால் உலகமெங்கும் பரவிக்கிடக்கும் பணம் நெருக்கடி காரணமாக பர்மாவிலுள்ள நிலங்களில் ஒரு பாகம் செட்டியார்களிடம் வந்திருப்பதை ஆதாரமாக வைத்து இல்லாத தோஷங்களையெல்லாம் அவர்கள் பேரிற் கற்பித்து வருவது அநியாயமாகும். இதற்கு சுமார் 25 வருஷங்களுக்கு முன்னதாக பர்மா தேசத்தில் கடன் தொகையைத் திருப்பிக்கொடுக்க முடியாதநிலைமை ஏற்பட்ட பொழுது செட்டியார்களிடம் வந்த நிலங்களை மறுபடியும் சில வருஷங்களுக்குள்ளே பர்மியர்களுக்கே விற்பனை செய்ததானது செட்டியார்களுக்கு நிலத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் இல்லையென்பதற்கு நிதர்சனமாகும். நம்மினத்தார் பரம்பரையாக, லேவாதேவி, வியாபாரம், இவைகளைக் கைக்கொண்டவர்களே தவிர விவசாயத்தில் ஈடுபட்டவர்களல்லர்; வியாபாரம், லேவாதேவியில் பணம் ஈட்டுவதைப்போல் நிலத்தில் பொன்னாக விளைந்தாலும் அது சமமாகமாட்டாதென்ற கொள்கையுடையவர்கள். ஆகவே தங்களிடமிருக்கும் நிலங்களை எதிர்காலத்தில் பொருத்தமான சமயம் நேரும்பொழுது செட்டியார்கள் விற்பனை செய்துவிடுவார்களென்பது திண்ணம்.

தற்காலம் செட்டியார்களிடமிருக்கும் நிலங்களைச் சாகுபடி செய்கிறவர்கள் பெரும்பாலும் பர்மியர்களே ஆவார்கள். விவசாயத்திற்குப் போதுமான பர்மியர்கள் கிடைக்கும்பகுதிகளில் அவர்களை விலக்கி இந்தியர்களைக் கொண்டு சாகுபடி செய்யவேண்டுமென்கிற எண்ணம் செட்டியார்களுக்குக் கிடையாது. நல்ல முறையில் பர்மியர்கள் கிடைத்தால் செட்டியார்கள் பெரிதும் அவர்களையே விரும்புகிறார்களென்பதும் கிடைக்காத இடங்களில்தான் மற்றவர்களைக்கொண்டு சாகுபடி செய்ய நேருகிறதென்பதும் யாவரும் நன்றாய் அறிவார்கள். இதனாலும் இதுபோன்ற பல காரணங்களினாலும் செட்டியார்களுக்கு பர்மியரிடத்தில் எவ்வித துவேஷமுமில்லாததோடு பர்மியர்களின் ஒற்றுமையை என்றும் விரும்புகிறவர்களென்பது நிச்சயமாகிறது.

உண்மை இவ்வாறிருக்க, பர்மியர்களுக்கும் செட்டியார்களுக்கும் நீண்டகாலமாகவிருக்கும் ஒற்றுமையைப் பங்கம் செய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு தகாத குற்றங்களைச் சுமத்துவதாகவிருக்கிறது. பொதுவாக இந்தியர்களுக்கு பர்மாவில் சாச்வத

மான பாத்யங்களும் செல்வாக்கும் உண்டாகிவிடக் கூடாதென்று தற்கால நாகரீகத்திற் சேர்ந்த சில நிபுணர்கள் செய்யும் சூழ்ச்சிகள் தான், கோரங்கிக் கலகத்திற்கும் பொதுவாக இந்தியர்களிடத்தில் பர்மியர்களுக்குப் பலவேறு விதங்களாக துவேஷம் ஏற்படுவதற்கும் காரணமாகும்.

## பர்மா பிரிவினை.

பர்மா தேசத்தை இந்தியாவிலிருந்து பிரிக்கவேணுமென்ற பிரேரபணை ஏற்பட்டபொழுது அதனால் பர்மியர்களுக்கு நன்மை ஏற்படுமோ தீமை ஏற்படுமோ அதை பர்மியர்களே தீர்மானம் செய்துகொள்ளவேண்டுமென்றும் அதுவிஷயமாகபர்மியர்களுக்குள் அபிப்பிராயபேத மேற்பட்டு இரண்டு வகுப்பாகப் பிரிந்து கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதில் பொதுவாக பர்மாவிலுள்ள இந்தியர்களும் முக்கியமாக நம்மினத்தாரும் ஒருகட்சியில் சேர்ந்துமற்றொரு கட்சிக்கு விரோதமாக நடப்பது நமக்கு நன்மைதரமாட்டாதென்றும் இரண்டு வகுப்பாரையும் நாம் சமமாக நினைத்துப் பிரிவினை விஷயத்தில் நாம் நடுநிலைமையாக விருப்பதுதான் நன்மைதருமென்றும் இந்தக் கிளர்ச்சியேற்பட்ட ஆரம்ப காலத்திலேயே நான் என்னுடைய அபிப்பிராயத்தை பர்மா நகரத்தாரவர்களிடம்தெரிவித்தேன். நம்மினத்தாரிற் பெரும்பான்மையோர் பர்மா பிரிவினை விஷயத்தில் நடுநிலைமையாக விருந்ததுதான் பிற்கால நடவடிக்கைகளுக்குச் சாதகமாக விருந்ததென்பது என்னுடைய அபிப்பிராயம்.

## பர்மா முன்னேற்றத்திற்கு நகரத்தார்கள் செய்த உதவியை அதிகாரிகள் அங்கீகரித்தல்.

பிரிட்டிஷ் ராஜாங்கம் இந்தியா பர்மா முதலான தேசங்களில் ஸ்தாபிக்கப்பெற்ற காலம் முதல் நம்மினத்தார் பற்பல அயல்நாடுகளுக்குச் சென்று வியாபாரத் துறைகளிலிறங்கி பொருளீட்டிப் புகழுடன்வாழ்ந்து வருவது எல்லோருமறிந்த விஷயம். ஆனகையில் பல குறைகளேற்படுவதும் அவைகளைப் பொருத்தமான முறையில் தெரிவித்து நிவர்த்தித்துக் கொள்ளுவதும் இயல்பேயாகும். பர்மா பிரிவினை சம்பந்தமாக ஏற்பட்ட ரிபோர்ட்டுகளிலும் மசோதாவிலும் பொதுவாக பர்மா இந்தியர்களுக்கும் முக்கியமாக நம்மினத்தாருக்கும் ஏற்பட்டிருந்த இடையூறுகளை உங்களின் சார்பாக தூது கோஷ்டியார் லண்டனில் இந்தியா மந்திரி முதலானோரிடத்தில் தெரிவித்த காலத்தில் அவரும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களும் பார்லிமெண்டு மெம்பர்களும் நியாயமறிந்து அனுதாபத்தோடு ஏற்றுக்கொண்டு நமக்கு முக்கியமான அம்சங்களிலெல்லாமிருந்த இடையூறுகளை நிவர்த்தித்துக்கந்ததற்கு நம்மினத்தார்பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு என்றும் நன்றி பாராட்டக்கடமைப் பட்டிருக்கிறார்கள். தூதுகோஷ்டியார் இங்கிலாந்துக்குச் சென்று பர்மா



இந்தியர்களின் குறைகளை இந்தியா மந்திரியிடமும், ஹவுஸ் ஆப் லார்ட்ஸ், ஹவுஸ் ஆவ் காமன்ஸ் ஆகிய பார்லிமெண்ட் மெம்பர்கள் பலரிடமும் தெரிவித்து அதனாலேற்பட்ட பலன்களைப்பற்றி லண்டனிலிருந்து தூது கோஷ்டியார் திரும்பும் தருவாயில் நான் வெளியிட்ட ஸ்டேட்மெண்டை அநேகர் பார்த்துத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். ஆகிலும் இந்தச் சமயத்தில் நகரத்தாரவர்களிடம் தெரிவித்துக்கொள்ளுவது அவசியமாகையால் அவைகளைப் பற்றி மறுமுறையும் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது இந்தியா மசோதாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சில திருத்தங்களினால் ஆகியில் ஜாயிண்ட் பார்லிமெண்டரி கமிட்டி ரிபோர்ட்டிலிருந்தும் இந்தியா மசோதா ஆகியில் வெளிவிடப்பட்டபொழுது இருந்த பிரிவுகளிலிருந்தும் நமக்கு ஏற்பட்டிருந்த பயம் ஒருவாறு விலகியிருக்கிறதாகச் சொல்லலாம். யாதொருவிதமான தடையுமன்னியில் இந்தியர்கள் எப்போதும்போல் பர்மாவுக்குப் போய்வரவும் சொத்து சுதந்திரம் வைத்துக்கொண்டு அவரவர்கள் தொழில்களை நடத்திவரவும் அவரவர்களுக்கு உள்ளஉரிமை அங்கீகரிக்கப்பட வேண்டு மென்பது நமது முக்கிய நோக்கம். ஜாயிண்டு பார்லிமெண்டரி கமிட்டி ரிப்போர்ட்டிலும் இந்தியா மசோதாவிலும் நமக்குள்ள பாத்தியங்களுக்கு மிகுந்த குறைவு ஏற்பட்டிருந்தது. மேலும் நிலசம்பந்தமாக ஈடுவிற்பனை முதலியவை செய்வதில் சில விபரீதமான கட்டுப்பாடுகள் ஏற்படுத்த பர்மா சட்ட சபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. பிரிவினை அடைந்த பர்மாவில் இந்தியர்களுடைய க்ஷேம லாபத்தைச்சரிவரக் கவனித்து வரப் போதுமான அளவு பர்மா சட்ட சபையில் பிரதிநிதி ஸ்தானம் இந்தியர்களுக்குக் கொடுக்கப்படாமலிருந்தது மேலே கண்ட விஷயங்கள் சம்பந்தமாக தாமதமன்னியில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்த வேண்டுமாய்க் கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டு அதன்பேரில் டில்லியில் வைஸ்ராய் அவர்களை நாங்கள் பேட்டி கண்டு குறைகளைத் தெரிவித்துக் கொண்டோம். நமது வைஸ்ராய் அவர்களும் நமது கக்ஷிகளை நியாயமென்று ஒப்புக்கொண்டதாகத் தோன்றியது. வேண்டும் சகாயத்தைச் செய்வதாக வாக்களித்து அதுபோல் உதவியவைஸ்ராய் அவர்களுக்கும், ஸர் மாக்கோம் ஹெய்லி அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும் நம்இனத்தார் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இத்துடன் மட்டுமல்லாமல் இந்தியா மந்திரியையும் இந்தியர்களுக்குப் பர்மாவில் போதுமான பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய விஷயமாகப் பேட்டிகாண வேண்டியது அவசியமாக இருந்தது. தூது கோஷ்டியாரும் சென்ற பிப்ரவரி மாதத்தில் இங்கிலாந்துக்கு வந்து இந்தியா மந்திரியவர்களைப் பேட்டி கண்டார்கள். இந்தியா மந்திரியவர்களும் தன்னால் இயன்ற அளவு சகாயம் செய்துகொடுக்கிற

மனநிலையிலிருந்தார்கள். இந்தியர்கள் முக்கியமாக செட்டியார்கள் மனம், ஜாயிண்டு பார்லிமெண்டரி கமிட்டி ரிபோர்ட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்த சில மாறான அபிப்பிராயங்களால் புண்பட்டிருந்ததில் இந்தியா மந்திரி சொன்ன வார்த்தைகளிலிருந்து மனதுக்கு ஆறுதல் ஏற்பட்டது. ஏதோ லேவாதேவி செய்வதன்மூலம் பர்மாவில் ஏராளமான நிலஸ்வாதீனம் செய்துகொள்ள எண்ணங்கொண்டிருப்பதுபோல் ஷை ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருந்த சில வார்த்தைகள் அகஸ்மாத்தாகவும் ஒரு குறை சொல்லவேண்டுமென்ற எண்ணமன்னியிலும் பிரஸ்தாபிக்கப்பட்டதென்றும் அதைப்பற்றி வருந்துவதாகவும் இந்தியா மந்திரி சொன்னார்கள். மேலும் பார்லிமெண்டிலும், அண்டர் செக்ரடரி பட்லர் துரை, லார்டு விண்டர்டன் துரை இருவர்களும் செட்டியார்கள் பர்மாவில் பாடுபட்டு அந்தத் தேசத்தின் அபிவிருத்திக்கு மிகவும் காரணமாகயிருந்துவருவதைப்பற்றிப் புகழ்ந்து பேசினார்கள். பட்லர் துரை அவர்கள் சொன்னதாவது:—

> “செட்டியார் சங்கம் பர்மாவில் ஓர் மிகவும் முக்கியமானஸ்தானம் வகிக்கிறது. செட்டியார்கள் பர்மாவுக்கு ஜீவாதாரமான சேவை செய்து வருகிறார்கள். பர்மாவின் சமூக வாழ்வில் செட்டியார்கள் நிரம்ப முக்கியமாக இருந்து பர்மா இழக்கக் கூடாத அவசியமான காரியங்கள் செய்து வருகிறார்கள்.”

செட்டியார்கள் நல்ல எண்ணத்துடன் பர்மாவில் வியாபாரம் செய்து வந்து பர்மாக் காரர்களுடன் நட்பும் அன்பும் பாராட்டி வந்திருக்கிற நிலைமையில் அவைகளை மனதார ஒப்புக்கொண்டு மேல் கண்ட பிரபுக்கள் பேசியதை நாம் பாராட்டவேண்டியது அவசியம்.

## இந்தியர்களின் பர்மா பிரவேசம்.

இந்தியர்கள் எப்போதும்போல் பர்மாவிற்கு யாதொரு தடையுமின்றிப் போய்வரும் உரிமையும் அங்கே தொழில்துறை செய்து வரும் உரிமையும் அவர்களுக்கு இருந்துவர வேண்டுமென்பது நமது முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இந்த விஷயத்தைப்பற்றி இந்தியா மசோதா 340 செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியர்கள் பர்மாவில் சொத்துக்கள் வைத்து அனுபவித்து வரவும், லேவாதேவி, வியாபாரம், நடத்திவரவும் பூர்ண பாத்தியம் உண்டென்று ஷை பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்துவந்த பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு எவ்வளவு பாத்தியமிருக்கிறதோ அந்த அளவுக்கு இந்தியர்களுக்கும் பாத்தியம் உண்டென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் இங்கிலீஷ்காரர்களைப் பாதிக்காத ஒருவிதி இந்தியர்கள் சம்பந்தப் பட்டவரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது பர்மாவில் தொழில் துறை செய்வதில் யாதொரு தடையும் இந்தியர்களுக்கு இருக்காது



என்று ஷை செக்ஷனில் முன் பாகத்தில் விவரிக்கப்பட்ட ஒரு உரிமையானது ஷை செக்ஷனில் பின் பாகத்தில் சொல்லப்பட்ட ஒருவிதிக்கு உட்பட்டிருக்கிறது. அதாவது இந்தியர்கள் பர்மாவிற்கு வருவதைத் தடுத்தோ அல்லது வரும் விஷயமாக நிபந்தனைகள் ஏற்படுத்தியோ பர்மாவில் சட்டமேற்பட்டால் அதற்கு உட்பட்டுத் தான் ஷை உரிமை இந்தியர்களுக்கு உண்டென்று காணப்பட்டிருக்கிறது. இம்மாதிரி விதியினால் தொழில்துறை சம்மந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியர்களின் பாத்தியத்திற்கு ஒருவிதமான குறைவு ஏற்பட்டதாக இருந்தது. ஷை விதியை எடுத்துவிட வேண்டுமென்றும் இந்தியர்கள் பர்மாவுக்கு யாதொரு தடையும் நிபந்தனையும் அன்னியில் போய் வரும் பாத்தியம் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் தூதுகோஷ்டியார் இந்தியா மந்திரியிடம் தெரிவித்துக்கொண்டார்கள். இந்தியா மந்திரியும் தூதுகோஷ்டியாரிடம் இது விஷயமாக இந்தியர்கள் கொஞ்சமேனும் கவலைப்பட வேண்டாம் என்றும் கூலித் தொழிலாளிகள்—லேபர்—பர்மாவுக்குப் போய்வருவதை மட்டும் அவசியமானால் கட்டுப்படுத்த எண்ணங்கொண்டு அதை உத்தேசித்து பர்மா சட்டசபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கூலித் தொழிலாளிகள் அல்லாத மற்ற இந்தியர்கள் பர்மாவுக்கு எப்போதும்போல் போய்வருவதில் எவ்விதத் தடையுமேற்படாதென்றும் உறுதி கூறினார். இருந்தாலும் கூலித் தொழிலாளிகள் சம்பந்தப்பட்டவரை பர்மாவுக்கு அவர்கள் வருவதைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம்உண்டானால் அந்த அளவுக்கு மேற்கொண்டு சட்டமேற்படுத்த அதிகாரமிருக்கக் கூடாதென்று தெரிவித்தோம். மேலும் பர்மாவில் கூலித் தொழிலாளிகள் எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்குத்தான் இந்தியாவிலிருந்து வருகிறார்கள் என்றும் பர்மா தேசத்திய தொழிலாளிகள் போதுமான அளவுக்கு ஏற்பட்டால் இந்தியாவிலிருந்து வருகிற கூலித் தொழிலாளிகள் எண்ணிக்கை தானாகவே குறைந்துவிடுமென்றும் இன்னும் வெகு நாட்களுக்கு பர்மியர்கள் க்ஷேமத்தை உத்தேசித்தே இந்தியத் தொழிலாளிகள் பர்மாவுக்கு வரவேண்டிய அவசியம் இருக்குமென்றும் சொல்லியதுடன் எந்த நிலைமையிலும் கூலித் தொழிலாளிகள் வருவதைக் கட்டுப்படுத்த பர்மா சட்டசபைக்கு அதிகாரம் இருக்கவேண்டியது அவசியமென்று தோன்றும் பக்ஷத்தில் அந்த அளவுக்கு மட்டிலும் அதிகாரத்தைக் கொடுத்து மற்ற இந்தியர்கள் சம்பந்தப்பட்டவரை யாதொரு தடையுமிருக்கக் கூடாதென்று மசோதாவிலேயே சொல்லவேண்டுமென்றும் போராடினோம். இந்தியா மந்திரியவர்கள் நாங்கள் சொன்ன கக்ஷிகள் நியாயமென்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சுயேச்சை அதிகாரம் பெற்ற ஓர் அரசாங்கத்திற்கு அவசியமாகத் தோன்றுகிற சட்டங்கள் ஏற்படுத்தும் பாத்தியத்தைக் குறைப்பது முறையல்ல

வென்றும் ஆனால் இந்தியர்களுக்கு இது சம்பந்தமாக மனதில் இருக்கக்கூடிய பயத்தை நிவர்த்தி செய்யவேண்டி பார்லிமெண்டாரின் அபிப்பிராயத்தைச்சந்தேகத்திற்குஇடமின்றிகாட்டக்கூடிய விதமாக கவர்னருக்குக் கொடுக்கப்படும் அதிகாரப் பத்திரத்தில் (இன்ஸ்ட்ருமெண்டு ஆப் இன்ஸ்டரக்ஷன்ஸ்) மேடி சட்டம் தொழிலாளிகள் சம்பந்தப்பட்டவரையில்தான் ஏற்படுத்தலாமென்றும் அது விஷயத்தில் கவர்னர் கவனம் வைக்கவேண்டுமென்றும் துலக்கிவிடுவதாகச்சொன்னார்கள். மசோதாவின்படியேஇந்தியர்கள் பர்மாவில் பிரவேசிக்கும் விஷயமாக சட்டசபையில் சட்டங்கள் கொண்டு வருவதானால் கவர்னர் அனுமதியன்றில் கொண்டுவரக்கூடாதென்று கண்டிருக்கிறது. இந்தியா மந்திரி அவர்கள் மேலே சொன்னபடி கவர்னருக்குக் கொடுக்கிற அதிகாரப் பத்திரத்தில் கூலித் தொழிலாளிகள் சம்பந்தப்பட்டவரைதான் சட்டங்கள் கொண்டு வரலாமென்று விவரித்துவிட்டால் இதற்கு மாறாகச் சட்டம்கொண்டுவரயாரேனும்முயற்சிசெய்தாலும் கவர்னர் அதற்கு அனுமதி கொடுக்க முடியாது. பர்மாவிற்குள் வரும் விஷயமாக வகுப்புவித்தியாசம் ஜாதிவேற்றுமைகாரணமாகக்கொண்டுவரப்படும் சட்டங்கள் பார்லிமெண்டுக்கு அனுப்பவேண்டும்.

இது விஷயமாகவே தாதுகோஷ்டியாரின் சார்பாக லார்டு விண்டர்டன் துரையவர்களும் நிக்கல்ஸன் துரையவர்களும் திருத்தங்கள் பார்லிமெண்டில் பிரேரேபணை செய்தார்கள். அவர்கள் கொண்டுவந்த திருத்தங்கள் நியாயமென்று கவர்ன்மெண்டார் சார்பாக அட்டர்னி ஜெனரல் ஸர். தாமஸ் இன்ஸ்கிப் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் மேடி பிரேரேபணையை அங்கீகாரம் பண்ணுவதில் ஒரு ஆக்ஷேபனை இருக்கிறதென்றும், அதாவது அன்ஸ்கில்டு லேபர் (Unskilled labour) என்ற பதம் ஸ்தூலமாக சரியாகயிருந்த போதிலும் மேடி பதத்திற்கு எவ்வளவு விதமாக வியாக்கியானம் செய்யக்கூடுமென்று இப்போது எதிர்பார்க்க முடியாதென்றும் பல விதமான வியாக்கியானங்களுக்கு இடம் கொடுக்கக் கூடிய ஓர் பதத்தைச் சட்டத்தில் உபயோகப்படுத்துவது உசிதமல்லவென்றும் நமக்கு உள்ள அபிப்பிராயத்தை கவர்னருக்குக் கொடுக்கப்படும் அதிகாரப் பத்திரத்தில் துலக்கிவிடுவதுதான் சாவதானம் என்றும் சொன்னார். அவர் கெவர்ன்மெண்டின்சார்பாகச்சொன்னதிலிருந்து பர்மாவிற்கு இந்தியக்கூலித்தொழிலாளிகள் வருவதை மட்டும் எதிர்காலத்தில் கட்டுப்பாட்டில் கொண்டுவரச் சட்டங்கள் கொண்டுவரக்கூடுமென்றும் மேற்கொண்டு மற்ற இந்தியர்கள் வருவதைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள்கொண்டுவரப்படாது என்றும் நிச்சயமாக வைத்துக் கொள்ளலாம். இது ஒருபுறமிருக்க, கூலித் தொழிலாளிகள் சம்பந்தமாக சில வருஷங்கள் வரை தற்போதிருக்கும் நிலைமையே இருந்துவரும் என்றும் அவர்கள் வருவதைக் கட்டுப்படுத்தச் சட்ட-



திட்டங்கள் ஏற்படுத்தப்படமாட்டாதென்றும் சொல்லப்பட்டது. எந்த நிலைமையிலும் கூலித்தொழிலாளிகள் அல்லாத மற்ற இந்தியர்கள் பர்மாவுக்குப் போய்வருவதிலும் அங்கே எப்போதும் போல் வியாபாரம் வகையரா செய்து வருவதிலும் சொத்துத்தேடி அனுபவித்து வருவதிலும் யாதொரு ஆக்ஷேபனையும் இருக்காதென்று ஏற்படுகிறது.

## பர்மாவில் இந்தியர்களின் நிலஉரிமையும் இடையூறுகளும்.

நில சம்பந்தமாக இந்தியர்களுக்குச் சில இடைஞ்சல்கள் ஏற்படுத்தக்கூடிய விதமாக இந்தியா மசோதாவில் ஒரு செக்ஷன் இருந்தது. அதாவது விவசாய நிலத்தை சுவான்தார்கள் விற்கவோ அடமானம் செய்யவோ நினைத்தால் விவசாயத் தொழில் செய்பவர்களிடம் மட்டும் அம்மாதிரி பாரதீனங்கள் செய்யலாமென்றும் விவசாயிகளல்லாதார்களுக்குப் பாரதீனஞ் செய்யக்கூடாதென்றும் சட்டம் ஏற்படுத்த பர்மா சட்ட சபையாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தியர்களுக்கு, அவர்களிலும் முக்கியமாக செட்டியார்களுக்கு பர்மாவில் ஏராளமாக நிலம் கைக்கு வந்திருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நிலத்தை வைத்துக்கொள்ளவேண்டுமென்பது நமது நோக்கம் அல்ல. கூடிய சீக்கிரத்தில் நியாயமான விலைக்கு அவைகளை விற்றுவிடுவதுதான் நமக்கு நல்லது. மேலே கண்டபடி சட்டம் ஏற்பட்டு நிலங்களை விற்பதானால் விவசாயிகளுக்கு மட்டுந்தான் விற்கலாம். மற்றவர்களுக்கு விற்க முடியாதென்றால் விவசாயிகள் கேட்கும் விலைக்குக் கொடுக்கும்படியாக ஏற்பட்டுவிடும். இதிலிருந்து நேரக் கூடிய நஷ்டத்திற்குக் கணக்கில்லை. இம்மாதிரிசட்டமேற்படுமேயானால் செட்டியார்களுக்கு சுமார் 80 கோடி பெறுமதியுள்ள சொத்துக்கள் பர்மாவிலிருப்பதாகச் சொல்லப்படுவதில் அவைகள் பேரளவில் மட்டிலும் ஆகுமேயல்லாது சொத்தை இழந்ததாகவே முடியும். இம்மாதிரிச் சட்டம் பர்மிய விவசாயிகளுக்குக் கூட நன்மை தரமாட்டாது. அவர்களும் தங்கள் தேவையை உத்தேசித்து விவசாயிகள் அல்லாதார்களிடம் கிரயம் அடமானம் வகையரா செய்து தொகை பெற முடியாது. அதனால் அவர்களுடைய ஐவேஜ் நிலையும் குறைந்துவிடும். மேலும்பர்மா தற்சமயம்இருக்கும்நிலைமையில், பண சகாயமில்லாமல் விவசாயத் தொழில் பர்மியர் நடத்தி வருவது சிரமசாத்தியம். மேலே கண்டவிதமாக பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணங்களிலும் சட்டம் ஏற்படுத்தப்பட்டு அதனால் விவசாயிகளுக்கே பெருத்தகஷ்டம்ஏற்பட்டிருக்கிறதாகஅரசாங்கக்கமிட்டிகளாலேயே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த விஷயங்களை இந்தியா மந்திரியவர்களிடம் எடுத்துக் காட்டி மேலே கண்டபடி சட்டம் ஏற்படுத்த அதிகாரம் கொடுக்கக் கூடாதென்று மன்றாடியதில் அவர்களும் அதை ஒப்புக்கொண்டு மசோ

186953

வில் இருந்த பிரிவை அவர்களே திருத்தப் பிரேரபணை கொண்டு வந்து மாற்றியிருக்கிறார்கள். அதாவது இப்போது மாற்றியிருக்கிறபடி, விற்பனை, அடமானம்சம்பந்தமாகக் கட்டுப்பாடுவிவசாயிகள் சம்பந்தப்பட்ட மட்டுந்தான் ஏற்படுத்தலாம். அதாவது விவசாயிகள் தங்கள் நிலத்தை அடமானம் கிரயம் செய்வதானால் தங்களைப் போன்ற விவசாயிகளுக்கு மட்டும் செய்யலாம். விவசாயிகளல்லாதாரிடம் செய்யக்கூடாது. ஆனால் செட்டியார்கள் மற்றஇந்தியர்கள் தங்கள் நிலங்களைஇஷ்டமானவர்களிடம் கிரயம் அடமானம் செய்வதில் யாதொரு தடையும் இல்லை. மேலும் அம்மாதிரி சட்டம் எதிர்காலத்தில் கொண்டுவரப்பட்டால் அதுவரை விவசாயிகளிடமிருந்து அடமானம் வகையரா மற்ற சமூகத்தார் பெற்றிருந்தால் ஷை பாத்தியங்களுக்கு யாதொரு குறைவும் ஏற்படக்கூடாதென்று துலக்கிவிட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்படிச் செய்ய வேண்டுமென்று கர்க்பாட்ரிக் துரையவர்கள் ஓர் திருத்தப் பிரேரபணையும் கொண்டுவந்தார்கள். அது நியாயமென்று அண்டர் செக்ரடரி பட்லர் துரையவர்கள் பார்லிமெண்டில் ஒப்புக்கொண்டார்கள். ஆனால்நாம்ஆக்ஷேபிக்கிறபாதுகாப்புஇந்தியா மசோதாவிலேயே இருப்பதாகவும் இருந்தாலும் மேல்கொண்டும் அந்த விஷயத்தைக் கவனிப்பதாகவும் சொன்னார்கள். இதுவிஷயத்தில் சந்தேகத்திற்கு இடமன்னியில் நமக்கு வேண்டிய ஆதாவு துலக்கிக்காட்டப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பர்மா சட்டசபையில் பிரதிநிதித்வம்.

பர்மா சட்டசபையில் இந்தியர்களுக்கு அதிகமான ஸ்தானங்கள் வேண்டுமென்று கேட்கப்பட்டது. இந்தியா மந்திரியவர்களும் அதைக் கவனிப்பதாக ஒப்புக்கொண்டுநாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்துக்கு ஒரு மெம்பர் தேர்ந்தெடுக்கிற உரிமையைக் கொடுத்திருக்கிறார்கள்.

### சுதேச சமஸ்தான பிரஜைகளில் உரிமை பாதுகாப்பு.

இந்தியா சுதேச சமஸ்தான பிரஜைகள் சம்மந்தமாக சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சுதேசசமஸ்தான பிரஜைகள் ஏராளமாக பர்மாவில் வியாபாரம் செய்து வருகிறார்கள். காத்தியவார் சமஸ்தானங்களிலிருந்தும் மற்ற சமஸ்தானங்களிலிருந்தும் அம்மாதிரி வெகு ஜனங்கள் பர்மாவில் தொழில் நடத்தி வருகிறார்கள். மேலும் பர்மாவில் லேவாதேவி வியாபாரம் செய்துவருகிற செட்டியார்களில் 3-ல் ஒருபாகத்தார் புதுக்கோட்டைச்சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு பர்மா பிரிவினையால் எவ்விதமான இடையூறும் ஏற்படாமல் பாதுகாக்கவேண்டியது மெத்த அவசியம். வியாபாரம் வகையரா சம்மந்தமாகவும் பர்மாபோய்வரும் விஷயமாகவும் பிரிட்டிஷ் இந்தியா ஜனங்களுக்கு உரிமை அங்கீகரிக்கப்பட்



டிருந்ததில் சுதேச சமஸ்தான ஜனங்கள் சம்மந்தமாக யாதொரு பிரஸ்தாபமும் இல்லை. பிரிட்டிஷ் இந்தியா ஜனங்களைப் போலவே சுதேச சமஸ்தான ஜனங்களுக்கும் பாத்தியமுண்டென்று ஸ்தாபிக்க வேண்டியது நிரம்ப அவசியமாகக் காணப்பட்டது. இதை இந்தியா மந்திரியவர்களிடம் தெரிவித்ததில் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டியது நியாயந்தான் என்றும் ஆனால் இதர அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றதால் மட்டும் சிரமமிருப்பதாகவும் சொன்னார்கள். தூது கோஷ்டியாரால் சுதேச சமஸ்தானங்கள் சுயேச்சாதிகாரம் பெற்றவர்களாயிருந்தபோதிலும் பல விஷயங்களிலும் ராஜீய காரியங்களிலும் பிரிட்டிஷ் இந்தியாவுடன் ஈடுபட்டு இருப்பதால் அவர்களுடைய க்ஷேமத்தையும் கவனிக்க வேண்டியது அவசியமென்று போராடப்பட்டது. இந்தியா மந்திரி அவர்களும் இதை ஒப்புக்கொண்டு அவர்களே திருத்தங்கள் கொண்டுவந்து பிரிட்டிஷ் இந்தியா ஜனங்களுக்கு வியாபாரம் செய்வது பர்மாவுக்கு வருவது சொத்து சுதந்திரம் அடைவது சம்மந்தமாக இருக்கும் பாத்தியங்கள் பூராவும் சுதேச சமஸ்தான ஜனங்களுக்கும் உண்டென்று துலக்கி விட்டார்கள். இந்த விஷயமாக புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள நமது நகரத்தாரவர்கள் ஷை சமஸ்தான தலைமைஅதிகாரி அவர்களிடம் தெரிவித்து சமஸ்தான சகாயத்தையும் பெற்றதாக நான் இங்கு வந்தபின் கேள்விப்பட்டேன். இதற்காக சமஸ்தான அதிகாரிகளுக்கும் நாம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தூதுகோஷ்டி இங்கிலாந்துக்கு வந்ததுமுதல் அவர்கள் கக்ஷிகளை அனுதாபத்துடன் கவனித்து வந்த இந்தியா மந்திரியவர்களுக்கும், அண்டர் செக்ரடரி அவர்களுக்கும் மற்ற இந்தியா ஆபீசிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் நாம் நிரம்பவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பர்மாவிலும் இந்தியாவிலும் பத்திரிகைகளிலும் சட்டசபைகளிலும் நமக்குப் பக்க பலமாக இருந்து ஒத்தாசை செய்து வந்த சிநேகிதர்களுக்கும் நாம் நன்றி பாராட்ட வேண்டியது அவசியம்.

### வருங்காலத்தில் கவனிக்க வேண்டியவைகள்.

இனி வருங்காலத்தில் நர்மினத்தார் கவனிக்க வேண்டிய சில விஷயங்களைப் பற்றிச் சிறிது சொல்ல விரும்புகிறேன். இதுவரை நமக்குக் கிரயப்பாத்தியமாக ஏற்பட்டுநம்முடைய கைக்கு வந்தநிலங்களை சர்வ சுதந்தரத்துடன் அனுபவிக்கவும் நாம் இஷ்டப்படுகிறவர்களுக்கு எந்தக் காலத்திலும் விற்கவும் நமக்குப் பாத்தியம் ஏற்பட்டுவிட்டது. அதைப் பற்றி எவ்விதமான பயமும் வேண்டியதில்லை. இனி நமக்குக் கிரயமாகாமல் ரிஜிஸ்தர் தஸ்தவேஜ் மூலமாய் அடமானமாகவோ அல்லது கொல்லாடிரல் செக்யூரட்டி யென்று சொல்லப்படுகிற மற்றொரு விதமான அடமானமாகவோ இருக்கும்

நிலங்களைப்பற்றி நம்மினத்தார் அதிக கவனிப்புவைத்து அங்கங்கே இருக்கும் நிலைமைக்குத் தகுந்தவிதமாக ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். பர்மாவில் விவசாயிகளிடமிருக்கும் நிலங்களை ஒத்தி, அடமானம், கிரயம் முதலான பராதீனம் செய்யக் கூடாதென்று பர்மா தேசத்துச் சட்ட சபையில் இனி வருங்காலத்தில் ஒருக்கால் விவசாயிகளைப் பாது காக்கும் பொருட்டு மசோதாக்கள் கொண்டு வரப்படலாம். அவ்வித மசோதா கொண்டுவரப்பட்டு சட்டமாக ஏற்படுகிறவரை மேலே நான் சொன்ன பிரகாரம் அடமானமாக இருக்கும் நிலங்களை உட்படுத்தப்படாதென்று அந்தச் சட்டத்திலேயே ஏற்படுத்தவும் கூடும். ஒருக்கால் அந்த அடமான நிலங்களையும் பாதிக்கும்படியான பிரிவுகள் அந்த மசோதாவில் இருக்குமேயானால் அந்தக் காலத்தில் செட்டியார்களும் பிறரும் உஷாராக இருந்து கவனித்து கவர்ன்மெண்டாரிடமும், சட்டசபை மெம்பர்களிடமும் தெரிவித்து தங்களுடைய அடமான பாத்தியத்திற்கு விரோதமில்லாமல் வேண்டிய திருத்தங்களைச் செய்து கொள்ளவேண்டும். கடன் கொடுத்தவர்கள் தங்கள் பணத்தை இழந்துபோகும்படிக்கான சட்டங்களை பர்மிய சட்ட சபை மெம்பர்கள் பிரேரேபிக்க மாட்டார்களென்றும் ஒரு சிலர் அவ்விதம் மசோதா கொண்டுவந்த போதிலும் அதற்கு பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் அனுமதி கொடுக்கமாட்டார்களென்றும் நாம் நம்பியிருக்கலாம். ஆனல் பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணங்களிலும் விவசாய நிலங்களைப் பொருத்து சில வருஷங்களுக்கு முன்னே ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களில் மேலே நான் விவரித்துச் சொன்ன அடமான நிலங்களை சுமார் இருபது வருஷ காலம் வரை அடமானம் பெற்றவர்கள் சர்க்கார் வரியைக் கட்டி அனுபவித்து அக்காலத்தில் அந்த நிலங்களில் ஏற்பட்ட வருமானம், அடமானக் கடனுக்குப் போதுமானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த இருபது வருஷ காலம் முடிந்தவுடன் அடமான நிலங்களை அடமானம் வைத்த சுவாந்தாரிடம் ஒப்புவித்துவிடவேண்டுமென்று விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணங்களிலும் ஏற்பட்டிருக்கும் சட்டம் விவசாயிகளுக்கே பலவிதமான கஷ்ட நஷ்டங்களை உண்டுபண்ணியிருப்பதாக கவர்ன்மெண்டாரே அபிப்பிராயப்பட்டிருப்பதால் அதே மாதிரியான சட்டத்தை பர்மாவில் ஏற்படுத்தமாட்டார்களென்று வைத்துக்கொள்ளலாம். ஆனல் வட்டித் தொழில் அதாவது லேவாதேவி செய்பவர்கள் எவ்வளவு நியாயமாகத் தங்கள் தொழிலைச்செய்தபோதிலும் அவர்களைப் பலவாருக நிந்தித்துப் பேசுவதே இந்தக் காலத்தில் ஒரு வழக்கமாகி விட்டது. மணிலெண்டர் ஆக்ட் அதிக வட்டி ஆக்ட் இவ்விதமாக லேவாதேவிசெய்பவர்களுக்குப்பலவிதமான இடையூறுகள்ஏற்படும் படியாய்சட்டங்கள்ஏற்பட்டுவருகின்றன. இனிபர்மாவில்டெனென்ஸி



ஆக்ட்அதாவது நிலங்களைப் பயிரிடுபவர்கள் சம்மந்தமாக சட்டங்கள் இன்னமும் ஏற்படலாம். ஆகவே காலதேசவர்த்தமானங்களை அனுசரித்து நம்மினத்தாரும் கவனமாகவிருந்து வரவேண்டியது அவசியமென்று ஏற்படுகிறது. சுருக்கமாக இதன் கருத்தை விளக்கிச் சொல்லுகிறேன். இதுவரை கிரயமாக நம் கைக்கு வந்த நிலங்களுக்கு எவ்வித பயமுமில்லை. நம் கைக்கு வராமல் விவசாயிகளிடம் அடமானமாக நாம் பெற்றிருக்கும் நிலங்களுக்கு மேலே நான் விவரித்துச் சொன்னப்படி இன்னும் சில வருஷங்களில் சட்டதிட்டங்கள் ஏற்படும்பொழுது நம்முடைய அடமானபாத்திய நிலங்கள் சம்பந்தமாக நமக்குச் சிலஇடையூறுகள் ஒருவாறு நேரலாம். அவ்விதக் காலங்களில் நம்மினத்தார் தங்களுக்கு இடையூறு நேராதபடி பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

### செய்கோன் நாடு கடத்திய ஆர்டர்.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்னதாக செய்கோனில் கடன் வாங்கினவர்களை நகரத்தார்கள் நிர்ப்பந்தப் பண்ணுவதாக புதுமையான ஒரு குற்றத்தைச் சாட்டி நம்மினத்தாரில் சிலரை ப்ரெஞ்சு கவர்ன்மெண்டார் நாடு கடத்தினதும், அதற்காக டில்லியில் வைஸ்ராய் அவர்களிடமும் லண்டனில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடமும் பாரிஸில் பிரஞ்சு கவர்ன்மெண்டாரிடமும் நகரத்தார்களின் சார்பாக ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியாரவர்களும், ஹிஸ், ஹைனஸ் ஆகாகான் முதலிய கனவான்களும் போராடி நாடு கடத்தப்பட்டவர்களை மாறி அந்த தேசத்திற்கு வரலாமென்று அனுமதி பெற்றதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நாடு கடத்தப்பட்டவர்கள் திரும்பி வரலாமென்ற அனுமதி கிடைத்து அதுபோல் அவர்கள் திரும்பி வந்தபோதிலும் நாடு கடத்தின ஆர்டர் ரத்து செய்யப்படாமலிருந்தால் எந்த சமயத்தில் மறுபடியும் அந்த ஆர்டர் அமுலுக்குக்கொண்டுவரப்படுமோவென்ற பயம் நகரத்தார்களுக்கு இருந்துவந்தது. நானும் ஸ்ரீமான் இராமநாதன் செட்டியாரவர்களும் லண்டனிலிருந்த காலத்தில் இந்த விஷயத்தைக் கவனிக்கவேண்டுமென்று செய்கோன் நகரத்தாரவர்களிடமிருந்து தகவல் வந்ததால் நாங்கள் லண்டனில் இந்தியா மந்திரி, அன்னிய இலாகா மந்திரி பாரிஸிலுள்ள பிரிட்டிஷ் அம்பாஸடர் ஆகிய இவர்களின் ஆபீஸ்கள் மூலமாக பாரிஸில் பிரெஞ்சு கவர்ன்மெண்டிலுள்ள அன்னிய இலாகா மந்திரிக்குத் தெரிவித்தும் நாங்கள்கலோனியல் மந்திரியைப் பார்த்தும் நாடு கடத்தும் ஆர்டரை இன்னமும் ரத்து செய்யாமலிருப்பது நியாயமில்லையென்பதாக வற்புறுத்திச் சொன்னோம். கலோனியல் மினிஸ்டர் நமது குறைகளைக்கேட்டு நியாயமறிந்து நாடு கடத்தும் ஆர்டரை ரத்துச் செய்துவிடுவதாக உறுதிகூறினர். ரத்துச் செய்துவிடும்படி இந்தோ செய்னவிலுள்ள கவர்னர் ஜெனரலுக்கு தந்தியுமனுப்பினர்.

செய்கோன்நாட்டில் நம்மினத்தார் பொருள்மிகுதியாகச்சம்பாதித்த காலத்தில் பத்தாந்து என்னும் வரி எவ்வளவு தொகை செலுத்தினார்களோ ஏறத்தாழ அதே தொகையை சுபிக்ஷமில்லாத இந்தக்காலத்திலும் செலுத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டார் வற்புறுத்துவதால் அது விஷயமாகவும் பாரிஸில் தெரிவிக்க வேண்டுமென்று செய்கோன் நகரத்தாரவர்களின் விருப்பப்பிரகாரம் கலோனியல் மந்திரியிடம் விஸ்தாரமாகத் தெரிவித்தோம். ஆனால் அவர் இதற்கு அனுகூலமான பதிலை அளிக்கவில்லை. இதைப்பற்றிய விஷயங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்துக் கூடியதைச் செய்வதாகவும் செட்டியார்களின் தொழில் நிலைமை. கஷ்ட நஷ்டங்கள் இவைகளைப் பற்றி நாங்கள் அவரிடம் தெரிவித்துக் கொண்டதை மனதில் வைத்துக்கொள்வதாயும் இது சம்மந்தமாக இன்னும் சில தகவல்கள் வேண்டுமென்றும் பதிலளித்தார். இவைகளையெல்லாம் செய்கோன் நகரத்தாரவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். பிரெஞ்சு கவர்ன்மெண்டாரிடம் பாரிஸில் நாங்கள் செய்த முயற்சிக்கு பிரெஞ்சு பார்லிமெண்டில் மெம்பராக விருக்கும் ஊட்ரே யென்ற கனவானும் மற்றொருகாலே என்ற கனவானும் எங்களுக்குப் பெரிதும் உதவியாக விருந்தார்கள்.

புதுக்கோட்டையில் வக்கீலாகவிருக்குர் ஸ்ரீமான் கே. நாகராஜ அய்யரவர்கள் பொதுவாக பர்மா இந்தியர்கள் சம்பந்தமாகவும், முக்கியமாக பர்மா நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சம்மந்தமாகவும் தூது கோஷ்டியாராகிய நாங்கள் செய்த முயற்சிகளுக்குப் பெரிதும் உதவியா யிருந்தார்கள். புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த நகரத்தார்கள் பர்மாவிலிருப்பவர்களுக்கு பிரிட்டிஷ இந்தியர்களைப் போலவே சகல உரிமையுமிருக்க வேண்டுமென்று அய்யரவர்கள் செய்த முயற்சி அதிகம். செய்கோன் நகரத்தாரவர்கள் சம்மந்தமாக பாரிஸில் நாங்கள் செய்த முயற்சிக்கும் நாகராஜ அய்யரவர்கள் துணையாக விருந்தார்கள். இத்தனை உதவிசெய்த ஒருவருக்கு நன்றி கூறுவது மிகையாகாது.

### நகரத்தார் சங்கங்களை பலப்படுத்துதல் வேண்டும்.

நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பற்பல தேசங்களில் வியாபாரத் துறைகளிலிறங்கித் தொழில் நடத்தி வருவதில் முன் காலத்தைப் போலல்லாது தங்கள் உரிமைகளைப் பாதுகாத்தற் பொருட்டு அங்கங்கே சங்கம், அஸோஸியேஷன் இவ்வாறு சில ஸ்தாபனங்களைச் சில காலமாக ஏற்படுத்தி நடத்திவருகின்றார்கள். இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் வேண்டியது மிகவும் அவசியமேயாகும். நம்மினத்தார் வியாபாரம் செய்யும் ஒவ்வொரு நாட்டிலும் பற்பல இடங்களில்இவ்விதசங்கங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் ஒவ்வொருநாட்டிலும்முக்கியமான ஒருநகரில்செண்டரல்அஸோஸியேஷன்



அதாவது தலைமையான ஒரு சங்கமிருக்க வேண்டியதவசியம். ரெங்கோன், சிங்கப்பூர், கோலாலம்பூர், கொழும்பு இந்த நகரங்களில் நான் குறிப்பிடும் தலைச் சங்கங்களும் ஒவ்வொரு நாட்டிலும் பற்பல ஊர்களில் கிளைச்சங்கங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தலைச்சங்கத்தை மிகவும் பலப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தக் காலத்தில் நமது இனத்தாரின் உரிமையைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தலைச் சங்கமூலமாகத்தான் முயற்சி செய்யவேண்டும். அங்கங்கே கவர்ன்மெண்டாரிடமும் நமது குறைகளைத் தெரிவிக்கவேண்டியதாக அவசியம்ஏற்படுகிறது. பொதுவாக நமதுநிலைமைகளை சிற்சில சமயங்களில் பொதுஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. இந்த சங்கங்கள் கூடுமான மட்டில் செல்வாக்குடையவைகளாக யிருந்தால்தான் சங்கத்தின் மூலம் நமது குறைகளைத் தெரிவித்துக் கொள்வதற்குப் பலன் கிடைக்கும். சங்கத்தின் காரியதரிசிகள் தங்கள் முழு நேரத்தையும் சங்கத்தின் அலுவலுக்கே உபயோகப் படுத்தவேண்டும். இது நம்மினத்தாருக்கு சிரமசாத்தியமென்பதை நான் தெரிந்து கொள்ளாமலில்லை. சங்கங்களின் முயற்சிகள் தினந்தோறும் பெரிதும் வேண்டியதாகவிருக்கும் இந்தக்காலத்தில் இதற்குத்தகுந்தஏற்பாட்டைச் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். ஒரு பெரிய அதிகாரியிடத்தில் அல்லது பொதுஜனங்கள் கூடிய ஒரு பெரிய சபையில் நம்மினத்தாரின் குறைகளைத்தைரியமாகவும் விஸ்தாரமாகவும் பேசி நமது கோருதலை நிறைவேற்றிக்கொள்வதற்குத்தகுந்தவர்கள்சங்கத்தின் பிரசிடெண்டுகளாகவும் செக்ரடரிகளாகவும் இருக்கவேண்டும். நம்மினத்தாரில் ஒவ்வொரு நாட்டிலும் மேலே நான சொல்லியிருக்கிறபடி போதிய ஆற்றலும் தகுதியுமுள்ள கனவான்கள் அநேகரிருக்கிறார்களென்று நான்உறுதியாகச்சொல்லுவேன். அவர்கள் சங்கத்திற்குத்தங்களின் விலையுயர்ந்த நேரத்தைத் தந்து உதவுதற்கு அவர்களுக்கு மனம் வரவேண்டியதைத் தவிர மேலே கண்டவாறு நம்மினத்தாரில்தகுதியுடையவர்கள் கிடைப்பதற்குச் சந்தேகமில்லை. சில ஊர்களில் பிற வகுப்பைச் சேர்ந்தவர்களைக்காரியதரிசியாக நியமிக்கவேண்டிய அவசியம் நேரும்போது அவர்கள் அதிகாரிகளிடத்தும் பொதுஜனங்களிடத்தும் மதிப்பைப்பெற்ற செல்வாக்குடையவர்களாயிருக்க வேண்டியது முக்கியம். சொற்பச் சம்பளத்தில் அவ்விதமான செல்வாக்கும் மதிப்பும் உடையவர்கள் கிடைக்கமாட்டார்கள். ஆகவே, தகுந்த சம்பளம் கொடுத்துத் தகுந்தவர்களை நியமிக்கவேண்டியதவசியம். இப்பாதிரி விஷயங்களில் செய்யும் செலவு அவசியமானதென்றும் அது நம்மினத்தாருக்கு மிக்கநன்மையைத்தருமென்றும் எல்லா நாடுகளிலுமுள்ள மேன்மை தங்கிய நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களுக்கு நான் இங்கு தெரிவித்துக்கொள்ளுவதை அவர்கள் தயவுசெய்து அங்கீகரிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

உ

# சுலோக பஞ்சக விஷயம்.

(வைகாசி மாதத் தொடர்ச்சி)

(சிவபரத்துவநிரூபண சிகாமணி,
பொன்னேரி, திரு, தி-மா-ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள்)

**ப**ங்கஜம் என்பதை யோகப் பெயரளவில் வைத்துக்கொண்டால் அது தாமரையையும் சேற்றில் முளைத்த மற்றச் செடிகளையுங் காட்டி விபசரிக்கும். ஆனால் அதனை ரூடிப் பெயராக வைத்துக் கொண்டால் அது தாமரையைமட்டுங் காட்டும். ஆகையால் யோகப் பெயரினும் ரூடிப் பெயரே தன் பொருளை உள்ளபடி காட்டவல்லதாதல் காண்க. மீமாம்ஸகரும் அதனாற்றான் (யோகாத் ரூடிர்பலீயஸீ, ரூடிர் யோகமபஹரதி) யோகத்திலும் ரூடியே வலியுடையதெனக் கொண்டனர். அப்படியே காயத்திரிமாதாவும் தன் தியேயவஸ்து அதுவோ இதுவோவெனப் பிறர் மயங்குமாறு யோகப் பெயர்களைத் தாங்காமல் சிவபிரானே அவ்வஸ்து என்று மந்த மதிகளுக்கும் விளங்கும்படி அவனுக்கே ரூடியாகிய பர்க்க நாமத்தைத் தன்மாட்டுத் தாங்கித் தன் பாதி விரத்தியத்தைக் காத்துக்கொள்வாளாயினளென்க.

நிற்க, ப்ருஹதாரண்யகம் 'யஸ்யாதித்யச் சரீரம் ய ஆதித்யமந்தரோ யமயத்யேஷத ஆத்மாந்தர் யாம்யம்ருத:' (எவனுக்கு ஆதித்தியன் சரீரமெவன் ஆதித்தியனுக்குள்ளிருந்து அவனை யியக்குகின்றான் அவனே ஆத்மாவின் அந்தர்யாமி, அமிர்தன்) என்றும், முண்டகம் 'ஸூர்யத்வாரேண விரஜா: ப்ரயாந்தி யத்ராம்ருதஸ்ஸ புருஷோஹ்யவ்யயாத்மா' (பாப ஹீனர்கள் சூரியதேஜோ மார்க்கத்தால் அமிர்தனும் அவ்யயனுமான புருஷன் இருக்குமிடத்தை யடைவார்கள்) என்றும் கூறி ஆதித்தியனுக்குள்ளிருப்பவனை அமிர்தன் புருஷன் என்று அழைக்கின்றன. ஜாபாலம் 'சதருத்ரியேணேத்யேதாந்யேவ ஹவா அம்ருதஸ்ய நாமாநி' (சதருத்ரீயத்திலடங்கிய பெயர்கள் அமிர்தனுடைய நாமதேயங்கள்) என்றும், கௌஷீதகிப்ராஹ்மணம் "ஏதாம்ருதத்வஸ்யேசாநம்." சுவேதாசுவதரம் 'உதாம்ருதத்வஸ்யேசாந:' (அமிர்தத்தன்மையை யளிப்பவன் ஈசானன்) என்றும், தைத்திரியம் 'அம்ருதோ ஹிரண்மய:' (அமிர்தனவான் பொன் வண்ணன்) என்றும் கூறியதால் அந்த அமிர்த நாமமும், நாரதபரிவ்ராஜகம் 'புருஷோத்தமோத்தமம்ஸர்வேச்வரம்.... அவ்யயம்' (அவ்யயனும் புருஷோத்தமோத்தமனும் சர்வேசுவரனே) என்று கூறியதால் அந்தப் புருஷநாமமும் சிவநாமங் களையாமென்பது சித்தமாயிற்று. இன்னும் பாசுபதப்ராஹ்மம் 'அந்தராதித்யே



ஜ்யோதி: ஸ்வரூபோ ஹம்ஸ:' (ஆதித்தியாந்தர் யாமியாகிய ஜோதி ஹம்ஸஸ்வரூபம்) என்று கூறிய ஹம்ஸத்தை ப்ரஹ்மவித் 'ஹம்ஸ ஏவ பரோ ருத்ரோ' (ஹம்ஸமாவான் ருத்ரனே) "ஹம்ஸ ஏவ மஹேச்வர:" (ஹம்சமாவான் மகேசுவரனே) என்று விளக்கியது. அதனாலும் ஆதியத்தியனிடத்திலிருக்கும் அந்தர்ஜோதி சிவபிரானே யாதல் வெளி. மேலும் ஆதித்தியன் சிவபிரானது அஷ்டமூர்த்தங்களுள் ஒன்று. அதில் அவன் உக்ரன் என்னும் பெயரால் விளங்குகிறான். 'ஸூர்யஸ் யோக்ர:' என்பது வேதம். 'அருக்கனாவா னரனுருவல்லனோ' என்பது தேவாரம்.

ஆதித்தியாந்தரியாமி பொன் வண்ணனென்பதை "ஸூர்யோந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:" (சூரியமண்டலத்தின் அதிதெய்வமாகிய ஆதித்தியனுக்கு அந்தரியாமிஹிரண்மய புருஷர்) என்ற ந்ருஸிம்ஹ பூர்வதாபிநியாலும், 'ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:' (ஆதித்தியாந்தரியாமி ஹிரண்மய புருஷர்) என்ற நாராயணம் மைத்திராயண சாந்தோக்யங்களாலும் அறிக. கைவல்யம் 'அஹமீசோ ஹிரண்மயோஹம்' (ஈசனும் நானே பொன்வண்ணனும் நானே. இது சிவன் சொல்) என்றதாலும், முண்டகம் 'ருக்மவர்ணம் கர்த்தார மீசம்' (பொன் வண்ணரும் கர்த்தரும் ஈசரும்) என்றதாலும், நாராயணம் 'நமோ ஹிரண்ய பாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்ய பதயே அம்பிகாபதய உமாபதய பசுபதயே நமோநம:, (பொற்றோளருக்குப், பொன் வண்ணருக்குப், பொன்னுருவினருக்குப், பொன்னுக்கிறைவருக்கு, அம்பிகாபதிக்கு, உமாபதிக்கு, பசுபதிக்கு நமஸ்காரம் நமஸ்காரம்) என்றதாலும், பஸ்மஜாபாலம் 'ஹிரண்யபாஹும் ஹிரண்ய ரூபம் ஹிரண்ய வர்ணம் ஹிரண்ய நிதிமத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீதமேகமாசாஸ்யம் பகவந்தம் சிவம்' (பொற்றோளரும் பொன்னுருவினரும் பொன் வண்ணரும் பொன்னிதியும் இரண்டற்றவரும் சதுர்த்தசப்தவாச்சியரும் பிரமவிஷ்ணு ருத்ரர்களை கடந்தவரும் உபாஸிக்கத்தக்க ஏகரும் ஷாட்குண்ய சம்பந்நருமான சிவபெருமான்) என்றதாலும் சிவபிரானே அந்த ஹிரண்மய புருஷர் என்பது நன்கு விளங்கும். "பொன்னார் மேனியனே" 'பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி.....ஈசனுக்கே' என்ற தமிழ் வேதமுங் காண்க.

'ஸ ஆதித்யோ விஷ்ணுச் சேச்வரச்ச' என்பது ப்ரஹ்ம வாக்கியம். இதிலுள்ள 'விஷ்ணுச்சேச்வர:' என்ற தொடரை இருவகையாகப் பொருள் கொள்ளலாம். விஷ்ணுவை யோகப் பெயராக வைத்து வியாபியாகிய ஈசுவரன் எனச் சிவபரமாக வுரைத்தல் ஒன்று. ஈசுவரனை யோகப் பெயராகவைத்து ஐசுவரியத்தை யுடையவனாகிய விஷ்ணுவென விஷ்ணு பரமாக வுரைத்தல் இன்னொன்று. இவ்வாக்கியம் துரிய வஸ்துவைப் பிரஸ்தாபிக்கின்றது. வேதமும

வதும் துரிய வஸ்துவைச் சிவநாமங்களாலேயே விளக்கும்; விஷ்ணு நாமங்களால் விளக்கவேமாட்டாது. அத்தகைய மற்ற வாக்கியங்களுக்கேற்பவே இந்தவாக்கியத்தையும் பொருள்கொள்ளவேண்டும். கொள்ளின் இதற்கு முதல்வகைப் பொருளே சிறக்கும். ஆகையால் இந்த வாக்கியத்தாலும் ஆதித்தியனிடம் வியாபித்திருப்பவன் சிவபிரானே யென்பது தெளிவு.

சிலர் 'அப்பர்க்கச்சொல் பர்க: என்பதன்று பர்கஸ் என்பதே யாம். பர்க: என்பதற்குத்தான் ருத்ரன் என்று அர்த்தம். பர்கஸ் என்பற்கு அவ்வர்த்தமில்லை, தேஜஸ் என்பதே அர்த்தம்' என்று கூறி அதை யோகப்பெய ராக்கித் தம்மனம் போன தெய்வங்களுக் கெல்லாங் கொண்டுபோய் ஒட்டவைத்துக் காயத்திரி தேவியின் பாதிவிரத்தியத்தைக் கெடுக்கப்பார்ப்பர். சிவபிரானது ரூடிநாமங்களில் அன்னார் கொண்ட அசூயையே அதற்குக்காரணம். மேலும் வேதவேதாந்தங்களில் வருந் தெய்வப்பெயர்களை யோகப் பெயர்களாக வைத்தே விவகரிப்பதாயின் எந்தத்தெய்வத்துக்கும் எந்தப்பெயருஞ் சொந்தமாகா தென்பதை அவரறியார். ஆகலின் மேற்காட்டிய சுருதிப்பிரமாணங்களை விரோதித்து நிற்கும் அவருரைகளனைத்தையும் பிரமவாதிகளல்லாத பாஷண்டவாதிகள் செய்த தூர்த்த வியாக்கியானங்களென்று ஒதுக்கி விடுவதே வைதிகோத்தமர்க்குக்கடனாகும். பர்க்கச்சொல் பர்கஸ் அன்று என்பதை ஸ்ரீமத் ஹரதத்தாசாரிய சுவாமிகளின் சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தானுமறிக. (வரும்.)

---

## சிவநேசனுக்கு வாழ்த்து.

திருவாமாத்தூர், கௌமார சபைத்தலைவர், திருவாளர்,

**தி. மு. செந்திநாயகம் பிள்ளை அவர்கள்.**

நல்லோ ரனைவருக்கு நற்றுயாய்த் தீமைசெறி
பொல்லோர்க் கெமனும் புகழ்பொருந்தி—எல்லோன்போற்
கோதில் பலவான் குடியிற் சிவநேசன்
நீதியொடு வாழ்க நிதம்.

பவநேசத் தோர்க்குப் பகையாய்ப் பழுதில்
தவநேசத் தோர்க்குத் தமராய்ச்—சிவநேசன்
றன்னை வளர்க்குந் தனிராம சாமியுனக்
கென்னை கைம்மா றுற்றுமிகம்.

**சிதம்பரம், வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை யவர்கள்.**

கோத்தெய்வ மின்று குலமின் றெனக்கூறும்
நாத்திகர் சொற்கள் நடுநடுங்கத்—தீத்தணல்போல்
சொல்லி வெளிவருஞ் சோமேச னண்பாநீ
அல்கண்டன் போல்வாழ் கவே.



யின் பசியை நீக்குதலால், நீக்கினவனுக்கு ஞானம் உண்டாமென்பது பொருந்துமாறு காண்க.

பாசஞான பசுஞானங்கள் நிலைபெறுதலின்றி மாறுவனவாகலின், சிவஞானம் அசைவில் ஞானமெனபட்டது. (௬௮)

(அ - கை.) உயிர்களுக்குப் பக்குவகாலத்திலுண்டாகும் ஞானத்தையும் ஞானசாரத்தையும் கூறினோம்; கூறவேண்டுவன அனைத்தும் இவற்றிலடங்கு மெனக் கூறி நூலை முடிக்கின்றார்.

௬௯. முன்னான ஞானமுட னாசார முடிவெல்லாம்
என்னாலே யிக்கால ஞானத்தை யியம்பினதால்
மின்னாரு நுண்ணிடையா யினியுனக்கு மீண்டிதனைச்
சொன்னாலென் சொலத்தகுவ தனைத்தினையுஞ் சொன்னோமே.

(இ - ள்.) மின் ஆரும் நுண் இடையாய் - மின்னலைப் போலும் நுண்ணிய இடையினை உடையவளே! முன் ஆன ஞானம் உடன் ஆசார முடிவு எல்லாம் - முத்திக்கு முதன்மையான ஞானமும் ஞானசாரமும் ஆகிய முடிவுகள் அனைத்தும் அடங்கிய, இக்காலஞானம் என்னால் உனக்கு இயம்பினது - இந்தக் காலோத்தர ஞானமானது என்னால் உனக்குச் சொல்லப்பட்டது, சொலத் தகுவது அனைத்தினையும் சொன்னோம் - சொல்லவேண்டுவன அனைத்தையும் சொன்னோமாகையால், இனி மீண்டு இதனை சொன்னால் என் - இன்னும் திருப்பி இதனைச் சொல்வதனால் பயன் யாது?

(பொ - ரை.) மின்னலைப் போலும் நுண்ணிய இடையினை உடையவளே! முத்திக்கு முதன்மையான ஞானமும் ஞானசாரமுமாகிய முடிவுகள் அனைத்தும் அடங்கிய இந்தக்காலோத்தர ஞானமானது என்னால் உனக்குச் சொல்லப்பட்டது. சொல்லவேண்டுவன அனைத்தையும் சொன்னோமாகையால், இன்னும் திருப்பி இதனைச் சொல்வதனால் பயன்யாது? எ - று.

(க - ரை.) இந்நூலில் கூறப்பட்ட ஞானம் ஞானசார மென்னும் இரண்டனுள், கூறவேண்டுவன அனைத்தும் அடங்குதலின், இனிக் கூறவேண்டுவதாக ஒன்றுமில்லை யென்பதாம்.

என்னாலே என்றவிடத்து ஏகாரம் அசை. ஞானத்தை என்றவிடத்து அத்து சாரியை; ஐ அசை. இயம்பினது ஆல் என்ற விடத்து ஆலும், ஈற்றிலுள்ள ஏகாரமும் அசை.

தகுவதனைத்து மென்பது ஒருமைப் பன்மை மயக்கம்.

சொன்னால் என் என்றதனால், திரும்ப திரும்பச் சொல்லவேண்டாம்; சொல்லியன கொண்டு அறிந்து கொள்க என்றவாறாயிற்று. (௬௯)

தேவிகாலோத்தர விருத்தி முற்றிற்று.

உ

சிவமயம்.

சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்தருளிய

# தேவிகாலோத்தர ஆகமம்

## தமிழ் மூலமும்,

இதற்குத் தேவகோட்டை சிவாகம சங்கத்துச்
சித்தாந்த சாத்திர போதகர்

தூத்துக்குடி

பொ. முத்தைய பிள்ளை இயற்றிய

## சித்தாந்த ரத்ந மென்னும் விருத்தியுரையும்.

இவை

ஷை பொ. முத்தைய பிள்ளையால்,

பலவான்குடி

"சிவநேசன்" அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றன.

யுவ ௵ ஆடி ௴

1935

விலை அணா 10.

உ

சிவமயம்.

# முகவுரை.

அரியயாக்கையின் மானுட யாக்கையே யாக்கை
விரியுநோன்பினில் உயிர்க்கொலா விரதமே விரதங்
கருதிற்றெய்வதங் கண்ணுதற் றெய்வமே தெய்வம்
தெரியிற்றேவிகா லோத்தா தேற்றமே தேற்றம். —வள்ளலார்.

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற உயிர்களுள், "மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம் - ஆனிடத் தைந்துமாடும் அரன் பணிக்காக" என்பதை உணர்ந்து சிவபெருமான் றிருவடியை அடைதற்கு முயலும் உயிர்கள் மிகச் சிலவேயாம். அவ் வுயிர்கள் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென்னும் நான்கு வகையான பக்குவங்களைப் பெற்று, சரியை கிரியை யோகம் ஞானமென்னும் நான்கு விதமான முயற்சிகளை முறையே செய்து, சாலோகமாதி பதமுத்திகளையும் சாயுச்சியமாகிய பரமுத்தியினையும் பெறும். இந்த இரண்டுவித முத்திகளுள் பரமுத்தியே சிறந்தது. இதுவே பிறவாமையை உடையது. இதனைப் பெறுதற்குரிய தீவிரதரபக்குவர்கள் செயலைக்கூறுவது தேவிகா லோத்தர மென்னும் ஆகமம். இவ் வாகமம் சிவாகமங்களின் சாரமாயுள்ளது.

இந்நூற்பெயர் தேவி, காலம், உத்தரமென்னும் மூன்று மொழிகள் சேர்ந்த தொடர் மொழியால் ஆக்கப்பெற்றுள்ளது. காலம் உத்தரமென்பது வடமொழிவிதிப்படி காலோத்தர மென்றாயிற்று. காலமென்பது உயிர்களுடைய தீவிரதரபக்குவ காலத்தையும், உத்தரமென்பது முடிவாகக் கூறப்படும் சித்தாந்தத்தையுங் குறித்து, உமாதேவியாருக்கு உயிர்களுடைய மேலானபக்குவ காலத்தில் உபதேசிக்கத்தக்க சித்தாந்தப் பொருளைச் சிவபெருமான் உபதேசித்தகாரணம்பற்றி வந்தபெயர் தேவிகா லோத்தரமென்பது.

"வானவர் தலைவா இந்த மன்னுயிர் முத்தியெய்த - ஞானவாசாரஞானம் அருளினை லருளென்றேத்தி - தேனமர் குழலாள் தேவன் திருந்தடிபணிந்து சொன்னாள்" என்னு முதற்செய்யுளாலும், "உத்தமகுணத்தாய் ஞான ஒழுங்கெனு மிரண்டினாலே - மெய்த்தவர் முத்தியெய்தும் விதியினை வகுத்துரைப்பன்." என்னு மிரண்டாவது செய்யுளாலும் நூற்பெயர்க்குக் கூறப்பட்ட காரணம் பொருந்துமாறு காண்க.

இந்நூல் ஞானம் ஞானசாரமென்னும் இரண்டுபிரிவுகளையுடையது. ஞானஇயலில் ஞானத்தை அநுட்டித்தற்குரிய அதிகாரி இலக்கணம், அதிகாரியின் பெருமை, முத்திநெறி, சீவன்முத்தி, சீவன்முத்தர் இயல்பு முதலியனவும், ஞானசார இயலில் ஞான சாதகன் சிவஞானத்தைத் தவிரஏனையவற்றைப் பயிலுதல் கூடாதென்பதும் கூறப்படுகின்றன.

இந்நூல் வடமொழியில் எண்பத்தைந்து சுலோகங்களுடனும் விருத்தியுடனும் உள்ளது. அதனை யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்யாசாலை அதிபர் ஸ்ரீமத் த. கைலாச பிள்ளையவர்கள் அச்சிட்டு உதவியிருக்கின்றார்கள். தமிழில்மொழி பெயர்த்துச் செய்யுளாகப் பாடியவர் பெயர் முதலியன தெரியவில்லை. பொருள்கள் வடமொழியோடு ஒத்திருக்கின்றன.

விநாயகர் வணக்கமாகக் கூறப்பட்ட காப்புச்செய்யுள், சருவஞானோத்தரம் தமிழ்மொழி பெயர்ப்புக்குக் கூறப்பட்ட காப்புச் செய்யுளோடு ஒத்திருக் கின்றமையால், இரண்டுநூல்கட்கும் மொழி பெயர்ப்பாசிரியர் ஒருவரே என எண்ணுதல்தகும். இந்தத்தமிழ்த் தேவிகா லோத்தரத்துக்கு ஓர் உரையுமுள்ளது. மூலமும் உரையும் அச்சாகி யிருக்கின்றன. உரைநடைமாயாவாத சம்பந்தமுடையதாய் இருக்கிறது. சருவஞானோத்தரம் தமிழ்மூலத்தை மாயாவாதி ஒருவர் அச்சிட்டுத் தம்முடைய பக்கத்தையே சருவஞானோத்தரம் கூறுகின்றமையால் சைவாகமங்களின் முடிபுமாயாவாதமே என்று கூறத்தொடங்கினர். மாதவச்சிவஞானசுவாமிகள்சருவாகமங்களின் முடிபு சர்வ ஞானோத்தர மென்று சிவஞானபாடியத்தில் மிகப்பாராட்டியுள்ளார்கள். அவர்கள் அருள்மொழியை ஆதாரமாகக் கொண்டு சருவஞானோத்தரத்திற்கு சைவசித்தாந்தபரமாக முத்திரத்நவிருத்தி என்னும் ஓர் உரைஎழுதி அச்சிட்டேன். அதனைக் கண்ணுற்ற பெரியாரிற்சிலர், தேவிகா லோத்தரத்திற்கும் சைவசித்தாந்த பரமாக ஓர் உரைஎழுதி வெளியிடவேண்டு மென்று விரும்பினர். அவர்கள் விருப்பத்திற்கிணங்கி சித்தாந்த ரத்நவிருத்தி என்னும் பெயருடன் ஓர் உரை என் சிற்றறிவுக் கெட்டியவாறு எழுதி முடித்தேன்.

இவ்வுரையில் ஒவ்வொரு செய்யுளுக்கும் அவதாரிகை, பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரைகள் உள்ளன. உரையிற் காணப்படும் முக்கியமான பொருள்களுக்குப் பொருளகராதியும் சேர்க்கப் பட்டிருக்கின்றது.

மாதவச் சிவஞான சுவாமிகள் திருவடிகளைச் சிரமேற்கொண்டு இவ்வுரைஎழுதப் பட்டமையால், உரையில் காணப்படும் குணங்களை சிவஞானசுவாமிகளிடத்தும், குற்றங்காணப்படின் அதனை என் சிற்றறிவினிடத்தும்எற்றிகுற்றத்தைப்பெரியோர்கள்பொறுப்பார்களாக.

இவ்வுரை எழுதி முடித்து நான்குவருடங்கட்கு மேலாகியும் அச்சிடப்படாத குறையிலிருந்தது. சிவநேசன் பத்திராதிபர் திருவாளர், ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்கள் அக்குறையை நீக்கிச் சிவநேசன் பத்திரிகை வாயிலாக அச்சிட்டு உதவினார்கள். இவ் வுதவிமிகவும் பாராட்டற்பாலது.

சிவாகமசங்கம்
தேவகோட்டை.

இங்ஙனம்,
பொ. முத்தைய பிள்ளை.

# பொருளகராதி.


இயல்கள். — பக்க எண்

ஞான இயல் 8
ஞானசார இயல் 73
அட்டசித்தி அட்டமாசித்தி எனச் சித்தி இருவகைப்படும் 95
அத்துவார்க்களின் வகை 31
அநுபவ மென்பது அறியப்பட்ட பொருளில் அழுந்துதல் 59
அவா ஆசைகளின் வேற்றுமை 82
அன்புடையவன் முத்தியை விரும்பவில்லையாயினும் அதனை அடைவன் 19
அன்பு நான்கு வகைப்படும் 18
ஆசை இடை விட்டு நிகழ்வதும் இடைவிடாது நிகழ்வதுமென இரு வகைப்படும் 12
ஆன்மதத்துவம் வித்யாதத்துவம் 38
இறைவனுடைய தூல சூக்கும நிலைகள் 71
இறைவன் அனைவர்க்கும் உறவினன் 71
உடலும் உலகும் சிவனுக்குத் திருமேனி 97
உயிருக்கு சார்ந்த தன் வண்ணமாதல் பரிணமமாகாது 27
உயிருக்குச் சிவம் இனமாகும் 97
உயிர்கள் செய்யும் செயல்களை இறைவன் ஏற்றுப் பலன்றருவன் 69
உயிர்ச் சார்புயானெனப்படும் உடற் பற்று 54
ஒவ்வொரு பொருளுக்கும்தடத்தநிலை சொரூபநிலையென இருநிலைகள் உண்டு 28
கல்வி யறிவாகிய செயற்கை யறிவு மக்களுக்கன்றி விலங்கு முதலியவற்றிற்குக் கிடையாது 47
குணத்தின் கூட்டம் குணி 60
குணம் சித்குணம் சடகுணம் என இருவகைப்படும் 9
குல ஒழுக்கத்திற்றவரின் இழிந்த பிறப்பினனாவன் 79
கூந்தல் ஐந்து வகையாக முடிக்கப்படும் 90
கேவல சகல சுத்த மென்னும் மூன்றும் காரணகாரியமென இருதிறப்படும் 40-51
சத்திநிபாதம் நால்வகைப்படும் 8
சமாதி இலக்கணம் 43
சாதன இலக்கணம் 43
சித்தம் தனித் தத்துவமன்று; மனத்தின் வியாபார பேதமே 38
சீவன் முத்தருக்கும் விருத்தி புறத்து நிகழின் பிறப்புண்டாம் 34
சீவன் முத்தனுடைய உடல் ஞான வெளியில் கலக்கு முறை 57
சீவன் முத்தனை தன்மமும் அதன்மமும் சாரமாட்டா 78
சீவன் முத்தி இலக்கணம் 56
சூனிய மென்பது சிவனைக் குறிக்கும் 36

ஞான பூசைக்கு உதிர்ந்த மலரும் கிரியா பூஜைக்குப் பறித்த மலரும் உபயோகம் 85
ஞானம் முத்திறப்படும் 21
ஞானிக்கு அன்ன மீதலால் ஞானமுண்டாம் 100
ஞானிக்கு வினை உடலூழாய்க் கழியும் 29
ஞானியைப் புகழ்ந்தவர்க்குப் புண்ணியமும் இகழ்ந்தவர்க்குப் பாவமுமுண்டாம் 100
தவம் மெய்த்தவம் பொய்த்தவ மென இருவகைப்படும் 9
தாய் தந்தை தலைவர் செயல்கள் 66
திருக் குறளில் தீவினையச்சம் இல்லற இயலிலும், இன்னு செய்யாமை. கொல்லாமை புலான்மறுத்தல் துறவறஇயலிலும் வைக்கப்பட்ட கருத்து 84
திருவாசகத்தில் எண்ணக் கடவேனே எனவும், சிரியாரோ வெனவும் கூறியவற்றின் கருத்து 57
தெய்வமும் தெய்வ சக்தியும் நீக்கவேண்டு மென்றதன் கருத்து 55
தேவிகா லோத்தர மென்னும் நூற்பெயருக்குக் காரணம் 11
நன்மை தீமைகள் பிரவாக அநாதி 91
நன்மை என்பது சிவனிடத்திற்றான் தீமை கலவாதிருக்கும் 30
நித்திரையின் பேதம் 43
பதிபசு பாசங்களின் இயல்பு 16
பற்று பயன் கருதியும் கடமை கருதியும் இருவகைப்படும் 11
பற்றுநீக்கம் நோய் முதலியவற்றாலுண்டாவதும் சிவஞானத்தாலுண்டாவது மென இருவகைப்படும் 35
பிராணவாயு தூல சரீரத்திற்குக் காவலாயுள்ளது 41
புராணக் கூற்று பொய்யென இகழப்படாமை 76
பொருட் சார்பு என தெனப்படும் பொருட்பற்று 54
மக்களுயிர்க்கு மாத்திரம் பகுத்தறிவு உண்டு 26
மன அடக்கத்துக்கு உபாயம் 14
மன அடக்கமே யோகமும் தவமும் 13
மனத்தை மனத்தினிடத்து நிறுத்துதல் 49
மனம் அகங்காரம் புத்தியின் றொழில்கள் 41
மனம் குரங்கு போலச் சுழன்று திரியும் 37
மனம் சங்கற்பத்தையும் விகற்பத்தையும் செய்யும் 14
முத்திக்குச் சாதனம் ஞானமும் ஞானத்திற்குச் சாதனம் சிவபூஜை முதலியனவும் 75
மூலகன்மம் அநாதி 91
வருணாச்சிரம தருமங்கள் உறங்கினவன் கைப்பொருள் போல நழுவ வேண்டும் 60
விருந்தென்பது புதியராய் வரும் அடியார் 76


# செய்யுள் முதற் குறிப்பு அகராதி.


| முதற்குறிப்பு | பக்க எண் | முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| அட்டமாசித்தி | 80 | திருத்தகுசமாதி | 42 |
| அளியமர் குழலாய் | 82 | துக்கசுகமாசை | 53 |
| அறிவாகிச் சுத்தனு | 64 | தூரியனாய் | 17 |
| அறிவு நிலை | 13 | நடுக்காம லெவ்வுயிரு | 84 |
| ஆகத்தே ஆங்கார | 58 | நான்முகன் முதலா | 67 |
| ஆசை கோபம் | 92 | நித்தமாம் பரமேசன் | 61 |
| ஆசை பய | 10 | நித்திரையும் பராக் | 50 |
| ஆசையினை அறவிட் | 87 | நியமக்கேத்திரம் | 76 |
| ஆராத சித்தம் | 44 | நிருபாதி | 30 |
| ஆற்றரிய தவம் | 68 | நிற்பனவ நடப் | 66 |
| ஆனநிலையாவுடைய | 70 | நீடிய தலைகா | 64 |
| இந்த முத்தி யடைவத | 74 | பல்வகையசித்திக | 79 |
| இப்படியே பாவித்து | 73 | பற்றினுற் சலிக்கு | 45 |
| இருளாகி | 5 | பிணக்கந் தம்பனை | 86 |
| இருள்விளையாட் | 3 | பிறந்து பெற்ற | 46 |
| இல்லாத விடமில்லை | 71 | புறனகங் | 25 |
| இவ்வகைய ஞானி | 98 | பொருண்முழுது மடை | 51 |
| உடம்பிரண்டு | 41 | பொருண் முழுதும்விட் | 93 |
| உடம்புடனே | 55 | மந்திரம் ஜெபந் | 23 |
| உத்தம குணத் | 8 | மருவிய பொருண் | 36 |
| உருவருவாவ | 19 | முத்திவிநா | 1 |
| எந்தவாருயிர் | 26 | முன்னுன | 101 |
| எல்லையிலா நூல்க | 63 | மூண்டுபற்றி | 38 |
| ஐவகைய பூதகா | 95 | மேலாய வின்ப | 37 |
| ஒரு பொருளைக் | 15 | மோக மூர்ச்சிகை | 39 |
| ஒன்றுடனுந்தோய் | 72 | யாதொரு விடயந் | 81 |
| கடைபடு முலகிய | 60 | யாவராயினு | 33 |
| கருத்தடங்கின் | 14 | யானெனு மதனை | 21 |
| கருமமுங் | 34 | யோகியாகி | 88 |
| கன்மபலமேது | 28 | வளியென மறுகும் | 48 |
| சக்கர நாடி | 22 | வாதுரைபயனில் | 91 |
| சத்தி தலந் | 35 | வாயுவென | 12 |
| சமயாசாரசங் | 79 | வானம் போல | 32 |
| சொன்னனஞானி | 99 | வானவர் தலைவா | 7 |
| தனக்கினியனும் | 89 | விட்டுமேலாம் | 94 |
| தன்மமுமதன்மமுந் | 77 | வையமாச்சிரமம் | 59 |

## பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 15 | மயகக | மயக்க |
| 18 | 5 | திருப்பவம் | திருப்பவன் |
| 21 | 15 | நிறன் | நின்ற |
| 38 | 21 | சீலம் ஆயஎன்பது அம் கெட்டு சீலாயஎனநின்றது | காலம் ஆதிஎன்பதும் சீலம்ஆயஎன்பதும் அம் கெட்டு காலாதி, சீலாய எனநின்றன. |
| 45 | 23 | நிற்றலின | நிற்றலின் |
| 64 | 7 | சீவன் முத்தன், | சீவன் முத்தன் |
| 82 | 17 | விட்ட | விடப்பட்ட |

3L
224,3127.5N
1935.8'12

188953

# செய்தித்திரட்டு.

## திருக்கண்ணார் கோயில்.

திருஞானசம்பந்தப் பெருமானால் தேவாரத் திருப் பதிகம் பெற்ற இத் ...நத்தலம் வைத்தீஸ்வரன் கோயிலுக்குத் தென்கிழக்கே இரண்டுமைலில் உளது. ...நமால் குறுமாணவ அவதாரத்தில் பூசிக்கப்பெற்றமையால் குறுமாணக்குடி ...வும் இந்திரன் பூசித்து முனிசாபம் தீர்ந்து ஆயிரங்கண்களைப்பெற்றமையால் ...ண்ணார் கோயில், கண்ணாயிர நாதரெனவும் பெயர்கள் வழங்கப்பெறுகின்றன. ...ருகுவளர் கோதையம்பாள்சமேத, கண்ணாயிரநாதரின் திருக்கோயில் ...கப் பழமையாய்ச் சிதைவுற்று முற்றிலும் புதிய திருப்பணி செய்யவேண்டிய ...லைமையிலிருந்தது. அதனைக் கண்ணுற்ற கண்டனூர் திருவாளர், தெ. ...ரு. சித. அருணசலய்யா அவர்கள் திருப்பணி செய்ய முன்வந்தார்கள். ...ண்டனூர் திருவாளர்களான அ. சி. நா. சி. நாச்சியப்ப செட்டியாரவர்களும் சிதம்பரம் செட்டியா ரவர்களும் சேர்ந்து செய்ய விரும்பியவாறே தெ. அரு. சித. குடும்பத்தினரும் அ. சி. நா. சி. குடும்பத்தினருமாக திருக்கோயில் திருப்பணியும், ஆத்தன்குடி முத்துப்பட்டணம் திருவாளர், சித. மு. நாரா. வெ. நாச்சியப்ப செட்டியாரவர்களால் திருக்குளத் திருப்பணியும் பொற்பணி யெனச் சிறந்த கருங்கற்பணியாகச் செய்யப்பெற்று திருவருளால் செவ்விதின் நிறைவேறின. பள்ளத்தூர் திருவாளர், அள. சுப. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் திருநந்தனவனம் வைத்துள்ளார்கள். புட்பங்கள் குறைவின்றிக் கிடைக்கின்றன. மகா கும்பாபிஷேகத்திற்கு ஆனி௴ ௧௭உ முதல் அனுக்ஞை விக்னேசுவர பூஜை யாதிய பூர்வாங்கக் கிரியைகளும் ௨௰உ கடஸ்தாபனம் யாக பூஜாரம்பமும் செய்து நான்மறையந்தணாளர்களும் சிவாகம பண்டிதர்களான ஆதிசைவ சிவாசாரியர்களும் வந்திருந்து சிவாகம விதிமுறைப்படி சிவமகாயாகத்தைச் சீர்பெற நடாத்தினர். ௨௪உ திங்கட்கிழமை வளர்பிறை சப்தமி ஹஸ்த மீன் சித்தயோகம் கூடிய நன்னாள் உதயாதி ௧௰-நாழிகைக்குள் மிதுன லக்ன நன் முகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகமும் நண்பகல் மகாபிஷேகமும் இரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும் மிகவைபவமாகச் செய்யப்பெற்றன. ஆரியந்தமிழெனும் இருபெரும்மறைகளும் நாதசுரமாதியமங்கலவாத்தியங்களும் முழங்கின. சதுர்வருணத்தாரும் சாதுக்களும், அடியார்களுமாக பெருந் திரளான அன்பர் குழாங்கள் வந்து தரிசித்தின்புற்றனர். ஆதிசைவர்; வேதவிப்பிரர்; ஓதுவா மூர்த்திகள்; தனவைசியர்கள்; கார்காத்த வேளாளர் ஆதியோருக்குத் தனித்தனி யாகச்சாலைகளமைத்து அறுசுவையினுமுறுசுவைத்தாய நல்லமுதருத்தப்பெற்றது. பலவூர் நகரத்தார்களும் திருப்பணியாளர்களின் சம்பந்திகளும் சுவாமிக்குப் பாத காணிக்கை வைத்துப் பட்டாடை சாத்திச் சிறப்புச் செய்தனர். யாகசாலையை அமராவதிபுதூர் திருவாளர், வயி. நாக. ராம. வெங்கடாசலச் செட்டியா ரவர்களும் யாகசாலை உக்ராணத்தை அமராவதிபுதூர் நகரத்தார்களும், பெரிய உக்ராணத்தை கோட்டையூர், பள்ளத்தூர் நேமம் கோயில் நகரத்தார்களும் நகர விருந்து விசாரணையை காரைக்குடி தேவகோட்டை நேமம் கோயில் நகரத்தார் களும், தண்ணீர்ப்பந்தர் விசாரணையை அரியக்குடிசொக்கலிங்கம்புதூர் வைரவன் கோயில் நகரத்தார்களும் மகாபிஷேகத்தை சொர்ணநாதபுரம் நகரத்தார் களும் இன்னும் பல காரியங்களை கண்டனூர் நகரத்தார்களும் சுவாமிகளின் திருவுலாவை கானாடுகாத்தான் திருவாளர், தா. கரு. சித. சிதம்பரஞ்செட்டியாரவர் களும் நிர்வகித்து மிகத் திறமையுடன் நடத்தினார்கள். எல்லா வகையானும் மாபெருஞ் சாந்தி மாண்புடன் நடைபெற்றது.